
விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram.
WESTERN UNION WU
Ria
Moving Money for better
உறவுகளிடமிருந்து
Western Union,
MoneyGram, Ria மூலம்
அனுப்பிய பணத்தை
ஒரு சில நிமிடங்களில்
நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு
துரித தபால்கள்
பொதிகள் சேவை
உடனுக்குடன்
அனுப்ப...
இலையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-2124)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 29 புதன்கிழமை (12.05.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 144



## குருந்தூர்மலையில் இராணுவ பாதுகாப்புடன் விகாரைக்கான வழிபாடுகள் ஆரம்பம்

**புத்தர் சிலை நிறுவப்பட்டு பிரித் ஓதல் இடம்பெறுகின்றது**

19ஆம் பக்கம் பார்க்க

## வட மாகாணத்தில் கொரோனா உக்கிரம்



### யாழில் 35 பேர் உட்பட வடக்கில் 72 பேருக்கு தொற்று

*(யாழ்ப்பாணம்)*

- ❖ நெல்லியடியில் எழுமாற்றுப் பரிசோதனையில் ஒருவருக்கு தொற்று.
- ❖ புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலையில் எழுமாற்றுப் பரிசோதனையில் 6 பேருக்கு கொரோனா.
- ❖ சாவகச்சேரி வைத்தியசாலையில் கடமையில் இருந்த பொலிஸாருக்கு தொற்று.

யாழ்.மாவட்டத்தில் 35 பேர் உட்பட வடக்கில் 72 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டிருப்பதாக யாழ். போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி நேற்றைய தினம் ஆயிரத்து 18 பேருக்கு நடத்தப்பட்ட பி.சி.ஆர் 19

## கொரோனாவால் மேலும் 23 பேர் பலி

### நேற்றும் +2,530 தொற்றாளர்கள்

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 23 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் 19

### இலங்கையை அச்சுறுத்தும் கொரோனா

## ஜனவரி முதல் இதுவரை 80 ஆயிரம் தொற்றாளர்கள்

(கொழும்பு)

இலங்கையில் 2021 ஜனவரி மாதம் முதல் மே 11ஆம் திகதி காலை வரையில் 80 ஆயிரத்து 68 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது எனப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி ஜனவரி மாதம் 20 ஆயிரத்து 19

### ஊரடங்கு தொடர்பாக

## வெளியான தகவலில் உண்மையில்லை

### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

(கொழும்பு)

இரவு வேளையில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிப்பது தொடர்பில் அரசாங்கம் 19

## கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த புதிய கட்டுப்பாடுகள் அறிவிப்பு

- ◆ வெளிமாகாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு தங்குமிடம் வழங்கினால் சட்டநடவடிக்கை.
- ◆ விடுமுறை மற்றும் ஓய்வுக்கால பயணங்களுக்குத் தடை

(கொழும்பு)

கொரோனா பரவலைக் கட்டுப் படுத்த மாகாணங்களுக்கிடையில் பயணக் கட்டுப்பாடு விதிக் கப்பட்டிருக்கும் நிலையில் பொலிஸார் புதிய 19

### மன்னார், வவுனியாவில் இடம்பெற்ற

## இரு வேறு விபத்துக்களில் இருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் இடம்பெற்ற விபத்து சம்பவங்களில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

அந்த வகையில் மன்னார் சிலாபத்துறைப் பகுதியில் மோட்டார் சைக்கிள் - லொறி விபத்தில் இளைஞன் ஒருவன் உயிரிழந்துள்ளார்.

கடந்த 6ஆம் திகதி 19

## தமிழகத்திலிருந்து கடலூடாக யாழுக்குள் நுழைந்தவர்

### தனிமைப்படுத்தப்பட்டார்

(கொழும்பு)

தமிழகத்திலிருந்து கடல்வழியாக இலங்கைக்குள் நுழைந்து யாழ்.சுழிபுரத்தில் பதுங்கியிருந்த நபர் சுகாதார பரிசோதகர் மற்றும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. (ம-3.33)

## மதுசாலைகள் 6 மணியுடன் மூடப்படும்

(கொழும்பு)

தீவிரம் பெற்றுவரும் கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நாட்டிலுள்ள அனைத்து மதுபானசாலை 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# 3 மாத குழந்தை உட்பட 26 பேர் கொரோனாவால் பலி

## இலங்கையை உக்கிரமாக தாக்கும் வைரஸ் தொற்று

(கொழும்பு)

**இலங்கையில் கோவிட் வைரஸ் தொற்றினால் 3 மாத குழந்தை உட்பட 26 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.**

**நேற்று முன்தினமே குறித்த உயிரிழப்புகள் பதிவாகியுள்ளது.**

காலி, ஹெட்டிபொல, பல்லேவெல, கண்டி, மத்துகம, பாதுக்கை, மீகஹகொடை, அக்குரஸ்ஸ, மொரான்துடுவை, அநுராதபுரம், கொழும்பு - 6, கலுஹக்கல, மொரட்டுவை, மல்வானை, கொழும்பு - 15, பொரளை, கந்தானை, மாஸ்வெல, வத்தேகம, மாலபே ஆகிய பகுதிகளிலும் யாழ்ப்பாணம், களுத்துறை மற்றும் நேபடை ஆகிய பிரதேசங்களில் தலா இரண்டு கோவிட் மரணங்களும் பதிவாகியுள்ளன.

14 ஆண்களும் 11 பெண்களும் 3 மாத குழந்தையொன்றும் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-03)

# சுகாதார விதி முறைகளை மீறி திருமண வைபவம்

## மணமக்கள் உட்பட 11 பேருக்கு தொற்று

(புத்தளம்)

சுகாதார சட்டங்களை பின்பற்றாமல் நடத்திய திருமண வைபவத்தில் பங்கேற்ற மணமகன் மற்றும் மணமகள் உட்பட 11 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதியாகியுள்ளது.

இதனையடுத்து புத்தளம்கொஸ்வத்தை மெதகிரிமிட்டியான கிராம சேவகர் பிரிவு நேற்றுக் காலை முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக தங்கொட்டுவை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மெதகிரிமிட்டியான பிரதேசத்தில் உள்ள மண்டபம் ஒன்றில் கடந்த 9 ஆம் திகதி இந்த திருமணம் நடைபெற்றுள்ளது.

அதில் சுகாதார சட்டங்களை மீறி 140 பேர் கலந்துகொண்டுள்ளதாக கிடைத்த தகவலை அடுத்து அதில் கலந்துகொண்டவர்களுக்கு பி.சி.ஆர் பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது.

பரிசோதனை முடிவுகளின் படி 11 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-03)

### அதிகரிக்கும் தொற்றாளர்கள்

# யாழ். போதனாவில் நாளாந்தம் இரு தடவைகள் பிசிஆர்

(யாழ்ப்பாணம்)

நாளாந்தம் அதிகரித்துவரும் கொரோனாப் பரவல் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் பிசிஆர் பரிசோதனைகளை நாளாந்தம் இரண்டு தடவைகள் மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறித்த நடவடிக்கை நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வந்துள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதன் அடிப்படையில் நாளாந்தம் பகல் ஒரு சுற்றாகவும் இரவு மற்றொரு சுற்றாகவும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை,

வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் கொரோனா நோயாளர்களை பராமரிக்கும் செயற்பாடு இன்று முதல் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். (ம-03)

### 31 ஆம் நாள் நினைவலைகள்



மலர்வு 25.03.1925

உதிர்வு 12.04.2021

எமது குடும்பத்தின் குலவிளக்கு

## அமரர் இளையபிள்ளை கிருஷ்ணர்

அழிவிலா நினைவும்
அகன்றிடாப் பாசமும்
வழியெலாம் தொடர
இறைவனின் பாதம்
எய்தினள் அன்னை

அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து இறுதி நிகழ்வுகளில் கலந்தும், தொலைபேசி இணைய வாயிலாக துயர் பகிர்ந்து கொண்டும் ஆறுதல் அளித்தவர்களுக்கும் சகல வகையிலும் மரணச் சடங்கில் உதவி ஒத்தாசை புரிந்த நல்லுள்ளங்கள், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மேலான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

கொரோனா பேரிடர் காரணமாக 31 ஆம் நாள் நினைவு நிகழ்வை அனைவருக்கும் அழைப்பு விடுத்து செய்யமுடியாத சூழ்நிலை காரணமாக எமது மன வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மாணிக்கவாசகர் வீதி,
கரவெட்டி மத்தி.

(6872)

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

# மே-18 இனப்படுகொலையை செப நாளாக அனுசரியுங்கள்

## கத்தோலிக்க மக்களிடம் வடக்கு – கிழக்கு ஆயர் மன்றம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

போரில் இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீதி கேட்டுப் போராடும் மக்களோடு இணைந்து வடக்கு-கிழக்கு ஆயர்களாகிய நாம் மே 18ஆம் திகதியை இனப்படுகொலையை நினைவுகூரும் நாளாகவும் செப நாளாகவும் அனுசரிக்கும்படியாக தமிழ் மக்கள் அனைவரையும் வினயமாகக் கேட்டுக்கொள்கிறோம் இவ்வாறு வடக்கு-கிழக்கு ஆயர் மன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

இதுதொடர்பில் யுத்தத்தில் பலியானோரை நினைவுகூரும் தினம் என்ற தலைப்பில் மன்றம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மே மாதம் 18ஆம் திகதி இலங்கையின் வடக்கு, கிழக்கு வாழ் மக்களுக்கு முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையின் பன்னிரண்டாவது ஆண்டு நிறைவாகும். இறுதிப்போரின்போது பலியானவர்களுக்கு இறுதிக் கிரிகைகள் கூட செய்ய முடியாது புதைத்துவிட்டு தப்பிப் பிழைத்து வந்தவர்களும், அதற்கு சாட்சிகளாக இருக்கும் ஏனையவர்களும் உயிரிழந்தவர்களை கண்ணீரோடு நினைவுகூரும் நாளாகும். இறந்தவர்களை நினைவுகூரும் உரிமையுடைய நாளாகவும் அந்நாள் இருக்கின்றது. படுகொலை செய்யப்பட்டவர்கள் அனுபவித்த வேதனைகளும் துன்பங்களும் விடுதலை வாழ்வுக்கு தொடர்ந்து பங்களிப்புச் செய்கின்றன.

இழைக்கப்பட்ட குற்றங்களுக்கு நீதி கேட்டுப் போராடும் மக்களோடு இணைந்து வடக்கு-கிழக்கு ஆயர்களாகிய நாம் மே 18ஆம் திகதியை இனப்படுகொலையை நினைவுகூரும் நாளாகவும் செப நாளாகவும் அனுசரிக்கும்படியாக வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்கள் அனைவரையும் வினயமாகக் கேட்டுக்கொள்கிறோம்.

மே. 18. 2021 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிக்கு ஆலயங்களில் மூவேளை செப மணியோசை எழுப்புதல், மக்களை செபிக்க அழைத்தல், ஈகைச் சுடர் ஏற்றுதல், இரண்டு நிமிட அக வணக்கம், இறந்தோர், பாதிக்கப்பட்டோர், துன்புறுவோரை நினைத்து மௌன செபம், 6.15 மணிக்கு இறந்தோரை நினைவுகூர்ந்து துக்க மணி ஒலித்தல். (கொவிட் - 19 சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றவும்) இவ் வேளையில் மக்கள் தங்கள் இல்லங்களில் இருந்தவாறு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செய்யவும் செபிக்கவும் அறிவுறுத்தவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர வகுப்பு மாணவர்கள் கொரிய மொழியை தேர்வு செய்யலாம்

## கொரிய தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த ஆண்டு முதல் கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு வெளிநாட்டு மொழியாக கொரிய மொழியைத் தேர்வு செய்ய முடியும் என கொரிய தூதுவர் சந்துஷ் சுன்ஜின் ஜியோன்கி தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்வாண்டு முதல் உயர்தரத்தில் கொரிய மொழி பரீட்சையில் சித்தியடைவோர் உள்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் உள்நுழைவதற்கான வாய்ப்புக் கிடைப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை கொரிய மொழியைக் கற்பதன்மூலம், கொரிய நாட்டில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் கொரிய மொழியை உயர்தர வகுப்புக்களில் உத்தியோகபூர்வமாக இணைத்துக் கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானம் தொடர்பில் தாம் மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்துள்ளார். (நி-4)

# நாட்டை உடனடியாக முடக்குங்கள்

## வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த இதுவே சிறந்த வழி

## பேராசிரியர் வைத்திய நிபுணர் சஞ்சய

**(கொழும்பு) கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கத்தினைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு நாட்டை உடனடியாக முடக்குவதே சிறந்த தீர்மானமென மருந்துகள் மற்றும் சுகாதார நிர்வாகம் தொடர்பான பேராசிரியர் வைத்திய நிபுணர் சஞ்சய பெரேரா தெரிவித்துள்ளார்.**

மேலும் நாட்டில் தற்போது பதிவாகும் அன்றாட மரணம் மற்றும் தொற்றுத் தரவை நம்ப முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் காலங்களில் இறப்புகளின் எண்ணிக்கை 20,000 ஐக் கூட கடக்கும் வாய்ப்பு உள்ளதுடன் செப்டெம்பர் மாதத்திற்குள் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 500,000 இற்கும் அதிகமாகலாம் என்றும் சஞ்சய பெரேரா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆகவே இத்தகையதொரு சூழ்நிலையைத் தடுப்பதற்கு நாட்டை முழுமையாக முடக்கிக் கொரோனா வைரஸ் தொற்றினைக் கட்டுப்படுத்துவதற்கு உரிய செயற்பாட்டினை முன்னெடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (நி-4)

# சினோபார்ம் தடுப்பூசி அனுமதிக்கும் எமக்கும் தொடர்பில்லை

## உலக சுகாதார ஸ்தாபனம் மறுப்பு

(கொழும்பு)

"இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பின் விளைவாக சினோபார்ம் தடுப்பூசி பாவனைக்கு அனுமதி கிடைத்தது" என்ற தகவலை உலக சுகாதார ஸ்தாபனம் மறுத்துள்ளது.

இலங்கையின் கொரோனா நிலைமைகள் தொடர்பாக ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கிங்ஸ்லி ரத்நாயக்க கருத்து வெளியிட்டிருந்த நிலையில், உலக சுகாதார ஸ்தாபனம் அதனை மறுத்துள்ளது.


சீன உற்பத்தியான சினோபார்ம் தடுப்பூசியை அவசர பயன்பாட்டுக்கு அனுமதித்தமைக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடனான கலந்துரையாடலுக்கும் தொடர்பில்லை என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

"இலங்கைக்கு 6 இலட்சம் சினோபார்ம் தடுப்பூசி கிடைத்திருந்தாலும் அவற்றைப் பயன்படுத்துவதற்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதி வழங்கப்படவில்லை என்பதை ஜனாதிபதி உலக சுகாதார ஸ்தாபன தலைவரின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

உலக சுகாதார ஸ்தாபனத் தலைவர் - ஜனாதிபதி கோட்டாபய சந்திப்பின் விளைவாக சினோபார்ம் பாவனைக்கு அனுமதி கிடைத்தது" என்று ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில், இருவருக்கும் இடையிலான சந்திப்புக்கும் தடுப்பூசி அனுமதி வழங்கப்பட்டதற்கும் தொடர்பில்லை என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. (நி-4)

# கொரோனாவால் செயலிழக்கும் தலைநகர் கொழும்பு



(கொழும்பு)


நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தலையடுத்து நகரங்களில் மக்கள் நடமாட்டம் மற்றும் அன்றாட நடவடிக்கைகளில் மந்த நிலையேற்பட்டுள்ளது.

அத்துடன் நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் கொரோனா மரணங்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் உயர்வடைந்து செல்கின்றது.

கொவிட் அச்சுறுத்தல் காரணமாக கொழும்பிலுள்ள பிரதான பேருந்து தரிப்பிடங்களில் மக்கள் நடமாட்டம் மிகக் குறைவாகக் காணப்படுவதையும் கொழும்பில் வாகன போக்குவரத்து மந்தமடைந்திருப்பதையும் நேற்று செவ்வாய்க்கிழமை அவதானிக்க முடிந்தது. (நி-4)

# மரண அறிவித்தல்

## செல்லையா காங்கேசு (மகாலிங்கம்)



தோற்றம்:- 30.12.1955
மறைவு:- 10.05.2021

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லையா காங்கேசு அவர்கள் 10.05.2021 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா நாகபூரணம் தம்பதியரின் பாசமிகு புதல்வனும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் லட்சுமி தம்பதியரின் மருமகனும் பங்கயற்செல்வியின் கணவரும் காளிதாசன், விஜிதரன், சுதாகரன், பகிரதன், பார்த்தீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதர்மினி, துஸ்யந்தினி ஆகியோரின் மாமனாரும் ருக்குமணி, ஸ்டாலிங்ராசா ஆகியோரின் சகோதரனும் மகாலிங்கம், புண்ணியராணி, குணரெட்ணம், கனகரெட்ணம், இராசரெட்ணம், பத்மாவதி, பரமேஸ்வரி, பராசக்தி, சசிகலா, பத்மப்பிரியா ஆகியோரின் மைத்துனரும் மகீசனின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.05.2021 இன்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்று தகனக்கிரியைகளுக்காக கேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-2144)

4 ஆம் வட்டாரம், புங்குடுதீவு. குடும்பத்தினர்

# ஒன்டாறியோவில் நிறைவேறிய சட்டமூலம் இரு நாட்டு உறவிலும் பாதிப்புகள் ஏற்படலாம்

## தினேஷ் குணவர்த்தன



(கொழும்பு)

'தமிழ் இனப்படுகொலை கல்வி வாரம்' என்று பெயரிடப்பட்டுள்ள தனி உறுப்பினரின் சட்டமூலம், கனடாவின் ஒன்டாறியோ சட்டசபையில் நிறைவேற்றப்பட்டுள்ளமைக்கு இலங்கை அரசாங்கம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக இலங்கைக்கான கனடா உயர்ஸ்தானிகரை நேற்று முன்தினம் திங்கட்கிழமை சந்தித்து கலந்துரையாடிய வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, குறித்த செயற்பாட்டுக்கு இலங்கை அரசாங்கம் சார்பில் தனது கவலையை வெளிப்படுத்தினார்.


இந்தச் சந்திப்பின்போது தினேஷ் குணவர்த்தன, கனடா உயர்ஸ்தானிகரிடம் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, "இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதாக இனங்காணப்படவில்லை என்ற கனடா அரசாங்கத்தின் நிலைப்பாட்டிற்கு மாறாக தற்போது அவர்கள் நடந்து கொண்டுள்ளனர்.

இதேவேளை ஒன்டாறியோ சட்ட சபையின் உப ஆளுநர், குறித்த சட்டமூலத்துக்கு வழங்கிய அனுமதியை இடைநிறுத்த கனடா அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் இந்த சட்டமூலத்தினால் இருதரப்பு உறவுகள், நல்லிணக்கம் மற்றும் சமாதானம் ஆகியவற்றில் பாதிப்புகள் ஏற்படுவதற்கு கூடிய சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன" என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த 6 ஆம் திகதி 104 ஆம் இலக்க தமிழ் இனப்படுகொலை கல்வி வாரம், குறித்த சட்டமூலம் கனடாவின் ஒன்டாறியோ சட்டசபையில் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாட்ரிட் ஓபன் டென்னிஸ்
## அலெக்சாண்டர் ஸ்வெரேவ் சம்பியன்

ஜேர்மன் டென்னிஸ் நட்சத்திரமான அலெக்சாண்டர் ஸ்வெரேவ், இத்தாலிய வீரரான மேடியோ பெரெட்டினியை வீழ்த்தி மாட்ரிட் ஓபன் போட்டியில் சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.


மாட்ரிட் ஓபன் சர்வதேச டென்னிஸ் போட்டி ஸ்பெயினில் நடைபெற்று வந்தது.

களிமண் தரைப் போட்டியான இதில் அரங்கேறிய ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப்போட்டியில் உலக தரவரிசையில் 6 ஆவது இடத்தில் உள்ள ஜேர்மனி வீரர் அலெக்சாண்டர் ஸ்வெரேவ், 10 ஆவது இடத்தில் இருந்த இத்தாலியின் மேடியோ பெரேட்டினியை எதிர்கொண்டார்.

2 மணி 40 நிமிடம் நடந்த பரபரப்பான இந்த ஆட்டத்தில் 6-7 (8), 6-4, 6-3 என்ற செட் கணக்கில் பெரெட்டினியை வீழ்த்திஸ்வெரேவ்சம்பியன் ஆனார்.

24 வயதான அலெக்சாண்டர் ஸ்வெரேவ் மாட்ரிட் ஓபன் பட்டத்தை வெல்வது இது 2 ஆவது முறையாகும். ஏற்கனவே 2018 ஆம் ஆண்டில் இந்த பட்டத்தை வென்று இருந்தார். அவர் வென்ற 1000 தரவரிசை புள்ளிகள் கொண்ட 4 ஆவது சர்வதேச பட்டம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

## ஏப்ரல் மாதத்தின்
# ஐ.சி.சியின் சிறந்த வீரர் பாபர் ஆசம்



ஏப்ரல் மாதத்துக்கான சிறந்த வீரராக பாகிஸ்தான் அணியின் கப்டனும் ஒருநாள் போட்டி பட்ஸ்மேன் தரவரிசையில் நம்பர் வன் இடத்தில் இருப்ப வருமான பாபர் ஆசம் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் சிறப்பாக செயற்பட்டதன் மூலம் அவருக்கு இந்த விருது கிட்டி உள்ளது.

சிறந்த வீராங்கனை விருதுக்கு அவுஸ்திரேலிய அணியின் அலிசா ஹீலி தேர்வு செய்யப்பட்டு இருக்கிறார்.

அவர் நியூசிலாந்துக்கு எதிரான 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் போட்டி தொடரில் 155 ரன்கள் சேர்த்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

# இந்தியாவில் நடத்த முடியாது
# கங்குலி திட்டவட்டம்



தள்ளிவைக்கப்பட்ட ஐ.பி.எல். போட்டியின் எஞ்சிய ஆட்டங்களை இந்தியாவில் நடத்த முடியாது என இந்திய கிரிக்கெட் வாரிய தலைவர் கங்குலி தெரிவித்தார்.

14 ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் கொரோனா தடுப்பு மருத்துவ உயிர் பாதுகாப்பு வளையத்தையும் மீறி வீரர்களை கொரோனாத் தொற்று தாக்கியதால் கடந்த 4 ஆம் திகதி ஐ.பி.எல். தொடர் கால வரையறையின்றி தள்ளிவைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

எஞ்சிய ஆட்டங்கள் நடைபெற முடியாமல் போனால் இந்திய கிரிக்கெட் வாரியத்துக்கு சுமார் ரூ.2,500 கோடி இழப்பு ஏற்படும் என்று கூறப்படுகிறது.

தள்ளிவைக்கப்பட்ட ஐ.பி.எல். போட்டியை வருகிற ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் இந்தியாவில் நடைபெற இருக்கும் 20 ஓவர் உலகக் கிண்ண போட்டிக்கு முன்னதாகவோ அல்லது பின்னரோ நடத்த இந்திய கிரிக்கெட் வாரியம் முயற்சி எடுக்கும் என்று தெரிகிறது. கொரோனா தாக்கம் அதிகரித்து வருவதால் இந்தப் போட்டி இந்தியாவில் நடைபெற வாய்ப்பில்லை என்றும் கடந்த ஆண்டு போல் ஐக்கிய அரபு அமீரகத்தில் நடத்தப்படலாம் என்றும் பேசப்படுகிறது.

இந்த நிலையில் இந்திய கிரிக்கெட் வாரிய தலைவர் சவுரவ் கங்குலி அளித்த ஒரு பேட்டியில், 'வீரர்களை 14 நாட்கள் தனிமைப்படுத்துதல் உள்ளிட்ட நிறைய கொரோனாத் தடுப்பு விதிமுறைகள் தள்ளிப் போடப்பட்ட ஐ.பி.எல்..போட்டியை இந்தியாவில் மீண்டும் நடத்துவதற்கு இடையூறாக இருக்கின்றன.

தனிமைப்படுத்துதலை கையாள்வது என்பது கடினமான காரியமாகும். இதனால் ஐ.பி.எல். போட்டியின் எஞ்சிய ஆட்டங்களை இந்தியாவில் நடத்த முடியாது. ஐ.பி.எல். போட்டியின் எஞ்சிய ஆட்டங்கள் எந்த இடத்தில், எப்போது நடத்தப்படும் என்பது குறித்து இவ்வளவு சீக்கிரமாக எதுவும் சொல்ல முடியாது' என்று தெரிவித்துள்ளார். (4)

# ஊழல் மோசடி குற்றச்சாட்டு;
# விடுவிக்கப்பட்டார் அவிஷ்க



முன்னாள் இலங்கை வீரரும் இலங்கை ஏ கிரிக்கெட் அணியின் பயிற்றுநருமாக விருந்த அவிஷ்க குணவர்தனவுக்கு எதிராக சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) ஊழல் மோசடி தடுப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளை அடுத்து அவர் மீது விடுக்கப்பட்டிருந்த குற்றச் சாட்டுக்களிலிருந்து விடுவித்துள்ளதாக ஐ.சி.சி. தெரிவித்துள்ளது.

இதனால் வழமைபோல் அவிஷ்க குணவர்தன கிரிக்கெட் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஐ.சி.சி. அனுமதி வழங்கியுள்ளது.

ஏறக்குறைய மூன்று வருட காலமாக நடத்தப்பட்ட சர்வதேச நீதிமன்ற விசாரணைகளின் முடிவில் இறுதித் தீர்மான மானது மூன்று பேர் கொண்ட நடுவர் குழுவினால் எடுக்கப்பட்டது.

2017 ஆம் ஆண்டில் டுபா யில் நடத்தப்பட்ட இருபது-10 கிரிக்கெட் போட்டித் தொடரின் போது ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டதாக அவிஷ்க குணவர்தன உள்ளிட்ட இலங்கை கிரிக்கெட் வீரர்கள் சிலருக்கு குற்றச்சாட்டு விதிக்கப்பட்டிருந்தது.

தன்மீது சுமத்தப்பட்ட சகல குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுக்கப்பட்ட அவிஷ்க குணவர்தன, தனது நற்பெயருக்கு அபகீர்த்தி ஏற்பட்டமை குறித்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (4)

## இந்திய கால்பந்து அணியின் முன்னாள் வீரர் காலமானார்



இந்திய கால்பந்து அணியின் முன்னாள் நடுகள வீரரான பார்ச்சுனட்டோ பிரான்னோ கோவாவில் நேற்று முன்தினம் மரணம் அடைந்தார். 84 வயதான அவருக்கு மனைவி, ஒரு மகன் மற்றும் ஒரு மகள் உள்ளனர்.


இந்திய அணிக்காக 26 ஆட்டங்களில் விளையாடி இருக்கும் பிரான்கோ 1960ஆம் ஆண்டில் ரோமில் நடந்த ஒலிம்பிக் போட்டிக்கான இந்திய அணியில் இடம்பிடித்து இருந்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் பருமன் அதிகரிப்பு

## தொற்றாநோய்களுக்கு வழிவகுக்கும்

### முடக்க நாட்களில் உணவில் அதிக கவனம் தேவை



(கொழும்பு)

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு உணவு அளிக்கும் போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்று சுகாதார அமைச்சின் மருத்துவ ஆய்வு நிறுவனத்தின் ஊட்டச்சத்து நிபுணர் வைத்தியர் ரேணுகா ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போதைய நிலைமை காரணமாக, குழந்தைகள் பாடசாலைகளுக்குச் செல்லாமல் வீட்டின் உள்ளேயே சிக்கியுள்ளனர். இதன் விளைவாக, அவர்கள் அடிக்கடி சாப்பிட முனைகிறார்கள். இதனால் இவர்கள், இனிப்பு மற்றும் எண்ணெய் நிறைந்த உணவுகளை குறைவாக சாப்பிடுவது சிறந்தது.

அத்துடன், குழந்தைகள் எந்த வெளிப்புற நடவடிக்கைகளும் இல்லாமல் வீட்டின் உள்ளேயே இருப்பதால் குறைவான மாச்சத்துள்ள உணவுகளை சாப்பிடுவது சிறந்தது. இல்லை எனில், உடல் பருமனாக மாறக்கூடும். இது பல தொற்றா நோய்களையும் ஏற்படுத்துகின்றது.

இதேவேளை, குழந்தைகளை ஒரே இடத்தில் இருக்க அனுமதிக்காமல் பல்வேறு செயற்பாடுகளுக்கு வழி நடத்துவது மிகவும் சிறந்தது.

அத்துடன் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை அதிக பழுத்த பழங்கள் மற்றும் காய்கறிகளை சாப்பிட வழி டத்த வேண்டும் என்றும் வைத்தியர் ரேணுகா ஜயதிஸ்ஸ தெரிவித்தார். (நி-4)

## தடுப்பூசி பெற்றோருக்கு அடையாள அட்டை



(கொழும்பு)

கொவிட் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வோருக்கு இலத்திரனியல் அடையாள அட்டையை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சினால் இந்த அடையாள அட்டை எதிர்வரும் காலத்தில் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (நி-4)

## மாகாணங்களுக்குள் மட்டும் ரயில் சேவை முன்னெடுப்பு



(கொழும்பு)

மாகாணங்களுக்குள் மட்டும் ரயில் சேவை முன்னெடுக்கப்படும் என ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக, விதிக்கப்பட்டுள்ள மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாட்டை அடுத்து இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (நி-4)

## அத்தியாவசிய சேவைகளுக்கு எந்த இடையூறும் ஏற்படாது

### அரசாங்கம் உறுதி



(கொழும்பு)

அத்தியாவசிய சேவைகளுக்கு எந்த அசௌகரியமும் ஏற்படாத வகையில் போக்குவரத்து கட்டுப்பாடுகள் அமுல்படுத்தப்படும் என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அத்தியாவசிய சேவைகள், ஏற்றுமதி சார்ந்த தொழில்கள், வேளாண்மை மற்றும் மீன்வளத் தொழில் ஆகியவை பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தாலும் செயற்படும் என்றும் குறிப்பிட்டார். (நி-4)

## பிரித்தானிய வைரஸ் திருமலையில் கண்டறிவு



(திருமலை)

பிரித்தானியாவில் பரவி வரும் B.1.1.7 வகை கொரோனா வைரஸ் திருகோணமலையிலும் கண்டறியப்பட்டுள்ளதாக மாவட்ட பிராந்திய பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வீ.பிரேமானந் தெரிவித்தார்.

திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார். (நி-4)

## இலங்கையுடனான விமானப் போக்குவரத்திற்கு குவைத் தடை விதிப்பு

(கொழும்பு)

இலங்கை உட்பட மூன்று நாடுகளுடனான நேரடி விமானப் போக்குவரத்தைக்குவைத் தடை செய்துள்ளது.

தெற்காசிய நாடுகளில் கொரோனா பரவல் தீவிரமடைந்துள்ளதைத் தொடர்ந்து, இலங்கை, பாகிஸ்தான், நேபாளம் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுடனான நேரடி விமானப் போக்குவரத்தைத் தடை செய்வதாக குவைத் நேற்று அறிவித்துள்ளது.

இந்தத் தடை மறு அறிவித்தல் வரும் வரை தொடரும் என்றும் குவைத் சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (நி-4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை வட கிழக்கு கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சதுர்த்தி உற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணியளவில் இடம்பெறவுள்ளது. இதில் பூசைகளைத் தொடர்ந்து வீதியுலா வருதல் இடம்பெறும். (5-8)

## புதிய நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் நிர்வாகசபைக் கூட்டம் கடந்த முதலாம் திகதி நடைபெற்றது. இக்கூட்டத்தில் போஷகராக செ.சுப்பிரமணியமும், தலைவராக சா.சுதர்சனும் உப தலைவர்களாக ஆர்.வி.எஸ். பாலசுப்பிரமணியமும் சி.பகீரதனும் செயலாளராக சு.சிறிகாந்தனும் உப செயலாளராக செல்வி.இ.வாசுகியும், பொருளாளராக சி.சிவகுமாரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாக சபை உறுப்பினர்களாக வி.தயாபரன், சொ.முகுந்தன், பா.சரவணபவன், ச.பாலசுப்பிரமணியம், பா.சசிகுமார், த.யதுஷன், பா.ஜெயபாலன், த.அருள்ராஜசிங்கம், த.சற்குணராசா, ந.கதிரேசன், இரா.செல்வவடிவேல், சா.ஸ்ரீசங்கர், சி.கதிரமலை, இ.இராமராஜ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (5-8)

# சந்தை புனரமைக்க நடவடிக்கை முன்னெடுப்பு



(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட புளியங்கூடல் பொதுச் சந்தை 2.5 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் மூலம் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக ஊர்காவற்றுறை பிரதேச சபை தவிசாளர் ம.ஜெயகாந்தன் தெரிவித்துள்ளார். அத்துடன் எழுவைதீவு மக்களின் கோரிக்கைக்கு அமைவாக உழவு இயந்திரங்களும் கொள்வனவு செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்வேறு தேவைப்பாடுகளுடன் இருந்து வந்த புளியங்கூடல் பொதுச்சந்தையை புனரமைத்துத் தருமாறு குறித்த சந்தை வியாபாரிகளும் பொது மக்களும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கோரிக்கை விடுத்தனர்.

அதனடிப்படையில் குறித்த சந்தைத் தொகுதியை நவீன வசதிகளுடன் புனரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேபோன்று எழுவைதீவு மக்களின் கோரிக்கையான உழவு இயந்திரங்களும் கொள்வனவு செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக எழுவைதீவு மக்களின் பெரும் குறையாக இருந்துவரும் கட்டடப் பொருட்களை இறங்குதுறையிலிருந்து எடுத்துச் செல்வதில் காணப்பட்ட போக்குவரத்து வசதியின்மையை நீக்கும் வகையில் சுமார் 2.9 மில்லியன் நிதியில் உழவு இயந்திரங்கள் கொள்வனவு செய்து கொடுக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்த வகையில் எமது ஊர்காவற்றுறை பிரதேச மக்களின் நலன்களை நாம் முடியுமானவரை நிவர்த்தி செய்து கொடுத்து வருகின்றோம்என்றும்அவர் மேலும் தெரிவித்தார். (5-8)

# மீண்டும் மக்கள் பாவனைக்காக திறந்து விடப்பட்ட வீதி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-கோவிற்குடியிருப்பு கடல் வட்டாரத்தில் நீண்டகாலமாக மூடப்பட்டிருந்த கடற்கரை வீதி ஒன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை சாவகச்சேரி நகரசபையினரால் பொலிஸாரின் உதவியோடு மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.



கடந்த காலங்களில் மக்களின் பாவனையில் இருந்த கச்சாய் வீதி ஒழுங்கை எண்-02 என்ற வீதி தனியார் ஒருவரால் கடற்கரைக்கு செல்ல முடியாதவாறு வருடக்கணக்கில் அடைத்து வைத்திருந்த நிலையில் அப் பகுதி மக்கள் நகரசபையிடம் இது தொடர்பாக முறையிட்டதனை அடுத்து நகர சபையினர் மீண்டும் குறித்த வீதியை மக்கள் பாவனைக்கான திறந்து வைத்துள்ளனர்.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட கோவிற்குடியிருப்பு கடல் வட்டாரத்தில் மேலும் சில கடற்கரை வீதிகள் தனியார்களால் கடற்கரைக்கு பொது மக்கள் செல்ல முடியாதவாறு தமது காணியுடன் சேர்த்து ஒழுங்கையையும் அடைத்து வைத்திருக்கும் நிலை காணப்படுவதாகவும் இதனால் மீனவர்கள் மற்றும் கால்நடை வளர்ப்போர் பாதிப்பை எதிர்கொள்வதாகவும் அப்பகுதி மக்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். (5-8-30)

# சட்டவிரோத சிகிச்சை நிலையம்; வழக்கு தாக்கல் செய்ய நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் ஆயுர்வேத சிகிச்சை நிலையத்தில் மேலைத்தேய சிகிச்சையை சட்டவிரோதமாக வழங்கி வந்த சிகிச்சை நிலையத்தை மாவட்ட உணவு மருந்து பரிசோதகர், பொதுசுகாதார பரிசோதகர்கள் பருத்தித்துறை பொலிஸார் இணைந்து சுற்றிவளைத்தனர். இதில்ஏராளமான மேலைத்தேய மருந்துகள் மீட்கப்பட்டன.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

அத்துடன் இச் சிகிச்சை நிலையம் அடிப் படை சுகாதார வசதிகள் இன்றி காணப்பட்டதுடன் மேலைத்தேய மருத்துவ சான்றுபெற்ற வைத்தியர் எவரும் இல்லாத நிலையில் சிகிச்சையளிக்கப்பட்டு வந்துள்ளது.

இதன்போது பரிசோதனைகளுக்கு ஒத்துழைக்க மறுத்தமை, மேலைத்தேய மருத்துவ தகுதிச் சான்றில்லாது மருந்துகளை வைத்திருந்தமை, மற்றும் சிகிச்சைக்கு பயன்படுத்தியமை, மேலைத்தேய தகுதிவாய்ந்த மருத் துவரின்றி மேலைத்தேய மருத்துவ சிகிச்சை வழங்கியமை மற்றும் தூய்மையற்ற நிலையில் நிலையம் காணப்பட்டமை உட்பட பல குற்றச்சாட்டுகளுடன் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய சுகாதாரப் பகுதியினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்த மருத்துவ நிலையம் கடந்த வாரம் பொது சுகாதார பரிசோதகர்களால் கொவிட் கட்டுப்பாட்டு பரிசோதனைகளுக்கு உட்படுத்திய போதும் இந்த நிலை காணப்பட்டு [illegible] (5-4-90)

# ஆரம்ப சுகாதார நிலையத்தில் திருட்டு

(கொழும்பு)

தென்மராட்சி-எழுதுமட்டுவாள் வடக்கு கரம்பகம் பகுதியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையம்ஒன்று நேற்று முன்தினம் திங்கட்கிழமை உடைக்கப்பட்டு அங்கு காணப்பட்ட குழந்தைகளுக்கான திரிபோசா, சத்துமா உள்ளிட்ட பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

இத்திருட்டுச் சம்பவம் அருகில் இருந்த பாதுகாப்பு கமராவில் பதிவாகியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நபர் திருடிய சத்துணவுமா பைக்கற்றுகளை எழுதுமட்டுவாள் பகுதியில் வைத்து விற்பனை செய்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (5-8-30)

# விசேட பூஜை வழிபாடுகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத்திருநாட்டில் வாழும் மக்களும் உலகெங்கிலும் வாழும் மக்களும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந் தும் அனைத்து நோய் நொடி களிலிருந்தும் மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட் டில் இறை ஆசி வேண்டி பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வரு கின்றன.

அந்த வகையில் நாளை 13 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் கோப்பாய் இடைக்காடு அருள்மிகு புவனேஸ்வரி அம்மன் தேவஸ்தானத்தில் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

விசேட பூஜை வழிபாடுகளின் நிறைவில் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ பா.சோமசுந்தரக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் இடம்பெறும் "ஆலய தரிசனம்" நிகழ்ச்சியில் காலை 6.30 மணிக்கு நேரடி ஒலிபரப்பு செய்யப்படும். (5-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவட்டங்களுக்கு இடையிலும் பயணக் கட்டுப்பாடு விதிக்கப்படலாம்

## இராணுவத் தளபதி

(கொழும்பு)

நாட்டின் நிலைமையைக் கருத்தில் கொண்டு தேவைப் பட்டால் எதிர்காலத்தில் மாவட்டங்களுக்கு இடையேயும் பயணக் கட்டுப்பாடுகளை விதிக்க வாய்ப்பு இருப்பதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அதிகரித்துச் செல்லும் கொரோனாத் தொற்றை அடுத்து மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ள நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுகாதார அதிகாரிகளுடன் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நடத்திய கலந்துரையாடல்களை அடுத்து எதிர்வரும் 30 ஆம் திகதி வரை மாகாணங்களுக்கு இடையில் பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(நி-4)

# சுமார் 11 ஆண்டுகளாக ஏமாற்றிய நபர் கைது

(கொழும்பு)

போலியான கடவுச்சீட்டைப் பயன்படுத்தி வெளிநாட்டிலிருந்து இலங்கைக்குத் திரும்பிய ஒருவரை பேலியகொட பிரதேச குற்றப் பணியகம் கைது செய்துள்ளது.

குறித்த சந்தேகநபர் 2007 இல் 100 கிராம் ஹெரோயினுடன் கண்டியில் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கபட்ட நிலையில் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றிருந்தார்.

சந்தேகநபர் இல்லாமல் வழக்கை விசாரித்த பின்னர் சந்தேகநபருக்கு நீதிமன்றம் மரண தண்டனை விதித்திருந்தது. சுமார் 11 ஆண்டுகளாக பொலிஸாரை ஏமாற்றி வந்த சந்தேக நபர், பேலியகொட டயர் சந்திக்கு அருகே வைத்து கைது செய்யப்பட்டார். (நி-4)

## அச்சுறுத்தும் கொரோனாத் தொற்று

# உலகளவில் 84 ஆவது இடத்திற்கு முன்னேறியது இலங்கை

(கொழும்பு)

**கொரோனா 3 ஆவது அலை தொற்றுப் பரம்பல் வேகமான அதிகரிப்பை ஏற்படுத்தி வரும் நிலையில், கொரோனாத் தொற்று பாதிப்பில் உலகளாவிய நாடுகள் வரிசையில் 84 ஆவது இடத்திற்கு இலங்கை முன்னேறியுள்ளது.**

கடந்த இரு தினங்களாக 2 ஆயிரத்து 500 இற்கு மேற்பட்ட தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வந்த நிலையில் இதுவரையான காலத்தில் இலங்கையில் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 28 ஆயிரத்து 429 ஆக அதிகரித்துள்ளது.

இத் தொற்று எண்ணிக்கை அடிப்படையில், உலகளாவிய தொற்று பாதிப்புக்குள்ளான நாடுகள் வரிசையில் இலங்கை 84 ஆவது நிலைக்கு முன்னேறியுள்ளது. ஒரு இலட்சத்து 31 ஆயிரத்து 753 தொற்றாளர்களுடன் அல்பானியா நாடு 83 ஆவது இடத்தில் உள்ளது.

மூன்று கோடி 35 இலட்சத்து 15 ஆயிரத்து 308 தொற்றாளர்களுடன் அமெரிக்கா முதலிடத்திலும் இரண்டு கோடி 29 இலட்சத்து 92 ஆயிரத்து 517 தொற் றாளர்களுடன் இந்தியா 2 ஆவது இடத்திலும் ஒரு கோடியே 52 இலட்சத்து 14 ஆயிரத்து 30 தொற்றாளர்களுடன் பிரேசில் 3 ஆவது இடத்திலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# திட்டம் இருந்தால் வாருங்கள் இணைந்து செயற்படுவோம்

## நாமல் பகிரங்க அழைப்பு

(கொழும்பு)

இன்றைய கொரோனா பெரும் தொற்று நேரத்தில் ஆங்காங்கே கருத்துக்களை சொல்லிக் கொண்டிருக்காமல், திட்டம் இருப்பின் இணைந்து செயற்பட வாருங்கள் என்று எதிர்க்கட்சி தலைவருக்கு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

காலி மாவட்டத்தில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது பேசிய அவர்.

ஆங்காங்கே கூறிக்கொண்டு இருக்காமல் வாருங்கள் உட்கார்ந்து பேசலாம் என நாங்கள் எதிர்க்கட்சித் தலைவருக்கு அழைப்பு விடுக்கின்றோம். உங்களிடம் திட்டமிருந்தால் நாங்கள் இணைந்து செய்வோம்.

இது கொவிட் தொற்று. தேர்தல் அல்ல, நீங்கள் கூறுவதுபோல் திட்டம் இருந்தால் வாருங்கள் அமர்ந்து பேசி திட்டத்தை அமுல்படுத்த நாங்கள் ஒத்துழைப்பு வழங்குவோம். எந்த பிரச்சினையும் இல்லை என்று குறிப்பிட்டார்.(நி-4)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 28 ½ செவ் 3 சூரி 6 இல்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: A/L. லண்டன் PR உண்டு<br>எதிர்பார்ப்பு: சாதாரணபடித்த பெண். உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/11894 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 21 செவ் 7 சூரி 5 இல் உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு:அரசாங்க ஊழியர்.வெளிநாடும் பார்க்கலாம்<br>தொ.இ:G/4771 |
| பிறப்பு: 1992 இந்து நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 31.5 செவ் 4 சூரி 6 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:NIT, MSc,B.Tech Work-Software Development<br>எதிர்பார்ப்பு:அழகிய தகுந்த வரன். வெளிநாடும் பார்க்கலாம்<br>தொ.இ: B/11896 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 58 ¾ செவ் 6 சூரி 7 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L BIO,தொழில்-காப்புறுதி நிறைவேற்று அதிகாரி<br>எதிர்பார்ப்பு:அரச,தனியார் உத்தியோகம். உள்நாடு மட்டும்<br>தொ.இ:G/4778 |
| பிறப்பு: 1989 இந்து நட்சத்திரம்:பூரம்<br>கி.பா: 64 செவ் 12 சூரி 11 இல்<br>உயரம்: 176 cm<br>தகைமை/தொழில்: தொலைபேசிதிருத்துநர்<br>எதிர்பார்ப்பு:பொருத்தமானவரன். உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/11897 | பிறப்பு: 1981 இந்து நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 56 ½ செவ் 7 சூரி 9 இல்<br>உயரம்: 5 1/2<br>தகைமை/தொழில்:BA,MA.தொழில்- DO (அரச)<br>எதிர்பார்ப்பு: ஓரளவு படித்திருத்தல் நன்று. ஆசிரியர்/ஏதாவது அரச வேலை. உள்நாடு மட்டும். இவர் கணவனை இழந்தவர்.<br>தொ.இ:G/4833 |
| பிறப்பு:1987 இந்து நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: செவ். சூரி 12 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:O/L, கப்பல் வேலை<br>எதிர்பார்ப்பு:சாதாரண வடிவான பெண். வெளிநாடும் பார்க்கலாம்<br>தொ.இ: B/11898 | பிறப்பு: 1985 இந்து நட்சத்திரம்: சதயம்<br>கி.பா:3 செவ்.சூரி 6 இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA பட்டதாரி. அரச அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்<br>தொ.இ:G/4846 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொ...
சேவைக் கட்டணமாக ரூபா 500 அற...



# மணிவிழா வாழ்த்து

## திரு. பொன்னம்பலம் சூரியமூர்த்தி

S.L.T.S-I (பயிற்றப்பட்ட கணித ஆசிரியர்)



### சேவை விபரம்

கிளி/வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம்
06.04.1988-31.12.1989
பலாலி ஆசிரியர் கலாசாலை
01.01.1990-31.12.1991
கிளி/வன்னேரிக்குளம் மகா வித்தியாலயம்
01.01.1992-11.04.1996
யா/மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை
12.04.1996-30.01.1997
யா/அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை
31.01.1997-31.12.2008
யா/வேலாயுதம் மகா வித்தியாலயம்
01.01.2009-31.12.2015
யா/புற்றளை மகா வித்தியாலயம்
01.01.2016-12.05.2021

கணித ஆசானாய் கல்லூரிகள் –பல
தன்னில் கற்பித்து – மாண்புமிகு
நல் மாணாக்கரை உருவாக்கிய ஆசான்
அகவை அறுபதில் அகத்தினில் இன்பமுடன்
உற்ற துணையோடும் பெற்ற நன் மக்களோடும்
பேறு பல பெற்று பெருவாழ்வு வாழ
வாழ்த்தி நிற்கும் உள்ளங்கள்

(C-2141)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/புற்றளை மகா வித்தியாலயம், புலோலி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரக்கடத்தல் முறியடிப்பு பொலிஸாரால் சாரதி கைது




(வவுனியா)

வவுனியா வடக்கு நெடுங்கேணி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக நைனாமடு காட்டுப் பகுதியில் பாரிய முதிரை மரங்கள் அழிக்கப்பட்டு சட்டவிரோதமாக லொறியில் கடத்திய குற்றச்சாட்டில் லொறி சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கடத்தப்பட்ட 24 முதிரைக் குற்றிகளும் பத்து இலட்சம் ரூபாய் பெறுமதியானது என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் நேற்று முன்தினம் வவுனியா நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார். (5-4)

# பொலிஸார், சுகாதார துறையினருக்கு இரண்டாம் கட்டத்தடுப்பூசி



(குருமன்காடு)

வவுனியா மாவட்டத்தில் பொலிஸார் மற்றும் சுகாதார துறை சார்ந்தவர்களுக்கு இரண்டாவது டோஸ் தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இந்திய மற்றும் சீன அரசாங்கத்தால் இலங்கை அரசாங்கத்திற்கு கொரோனாத் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றை பல்வேறு மாவட்டங்களிலும் தேவையின் பொருட்டு பயன்படுத்துவதற்கான நடவடிக்கையினை சுகாதார துறையினர் முன்னெடுத்துள்ளனர். அந்த வகையில், வவுனியா பொலிஸார் மற்றும் சுகாதாரத்துறை சார்ந்தவர்களுக்கான இரண்டாவது டோஸ் கொவிட் தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கை வவுனியா பொது வைத்தியசாலையில் நடைபெற்றது. (5-4-8-250)

# சட்டவிரோத கசிப்பு உற்பத்தி ஒருவர் கைது



(குருமன்காடு)

மடு பிரதேசச் செயலாளர் பிரிவில் உள்ள பூசரி குளம் மற்றும் இரணை இலுப்பைக்குளம் கட்டுப்படுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தி நடைபெறும் இடம் நேற்று முன்தினம் கண்டு பிடிக்கப்பட்டதோடு நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டதோடு, கசிப்பு வடிக்க பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் 14 லீற்றர் கசிப்பு போன்றவற்றை மீட்டனர்.

மன்னார் மாவட்ட மதுவரி நிலையத்தின் அத்தியட்சகர் எஸ்.செந்தூர் செல்வன், மன்னார் மாவட்ட மதுவரி நிலையத்தின் மாவட்ட பொறுப்பதிகாரி எம்.என். மடிக சேகர, மதுவரி நிலையப் பரிசோதகர் எம்.பாலதாஸ், மதுவரி நிலைய சாஜன் என்.டி. எம்.டில்கான், மதுவரி நிலைய உத்தியோகத்தர்களான எதிரி வீர, திஸாநாயக்க, ஏ.ஜே.பீரிஸ் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து குறித்த நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளதோடு, மீட்கப்பட்ட பொருட்கள் மன்னார் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட உள்ளன.

(4-8-285)



# விசேட சோதனை நடவடிக்கை 28 பேருக்கு எதிராக முறைப்பாடு

(குருமன்காடு)

வவுனியா நகரில் முகக் கவசம் அணியாது பயணித்தவர்களுக்கு எதிராக இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். இதன்போது 28 பேருக்கு எதிராக முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டன.

வவுனியா, பழைய பேருந்து நிலையம் முன்பாக நேற்று பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து கொவிட் -19 பரவலை கட்டுப்படுத்துவதற்கான விசேட நடவடிக்கையில் ஈடுபட்டனர்.



இதன்போது குறித்த பகுதியில் முகக்கவசம் அணியாது பயணித்தவர்கள், முகக்கவசத்தை சீராக அணியாது பயணித்தவர்கள் ஆகியோரை வழிமறித்து அவர்களுக்கு கடும் எச்சரிக்கை வழங்கப்பட்டதுடன், முறைப்பாடுகளையும் பதிவு செய்தனர்.

அத்துடன், பழைய பேருந்து நிலையத்திற்கு வருகை தந்த பயணிகள் பேருந்துகளையும் வழிமறித்து சோதனை மேற்கொண்டதுடன், பேருந்துகளில் முகக்கவசத்தை சீராக அணியாதவர்கள் மீதும் நடவடிக்கை எடுத்தனர்.

இந்நிலையில், முகக் கவசத்தை அணியாமை மற்றும் முகக்கவசத்தை சீராக அணியாமை என்பவை தொடர்பில் 28 பேருக்கு எதிராக முறைப்பாடுகளை பதிவு செய்தனர். (5-4-8-250)

# கொவிட்டை கட்டுப்படுத்த ஆவி பிடிக்கும் பொறிமுறை

## பிரதேச சபையில் புதிய முயற்சி

(முறிகண்டி)

கொவிட் பரவலை கட்டுப்படுத்த பொறிமுறை ஒன்றை கரைச்சிப் பிரதேச சபை ஆரம்பித்து வைத்துள்ளது.

ஆவி பிடிக்கும் வகையில் பொறிமுறை ஒன்றை பரீட்சார்த்தமாக நேற்று அறிமுகம் செய்துள்ள கரைச்சிப் பிரதேச சபை நேற்று முதல் ஊழியர்களின் பயன்பாட்டுக்காக ஆரம்பித்து வைத்தது.

குறித்த பொறிமுறையானது ஊழிர்கள் உள் வருகையின் போதும் பணி நிறைவடைந்து திரும்பும் போதும் இவ்வாறு ஆவி பிடித்து தொற்றிலிருந்து பாதுகாக்க முடியும் எனவும் அதேவேளை, இப்பொறிமுறையை மக்கள் பயன்பாட்டிற்காக பொதுச் சந்தைகள், நூலகங்கள் உள்ளிட்ட பகுதிகளில் அமைக்க உள்ளதாக [illegible] தேசசபை தெரிவித்தது. (4-8-100)

# தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களிற்கு உரிய காலப்பகுதியில் உதவிகள் கிடைக்கின்றன

## கிளிநொச்சி அரச அதிபர்

(முறிகண்டி)

தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களிற்கு அரசினால் வழங்கப்படும் உதவிகள் உரிய காலப்பகுதிக்குள் கிடைப்பதில்லை என பச்சிலைப்பள்ளி தவிசாளரின் கருத்தை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் நிராகரித்துள்ளார். கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் வழங்கப்படும் தனிமைப்படுத்தப்பட்டவர்களிற்கான உதவிகள் உரிய காலப்பகுதியில் கிடைப்ப[illegible] பெற்றதன் பின்னரே கிடைப்பதாகவும் பச்சிலைப்பள்ளி தவிசாளர் அண்மையில் தெரிவித்திருந்தார்.




இந்த நிலையில் தமது பிரதேச சபையினால் உதவிகளை அவ்வாறு தனிமைப்படுத்தப்பட்ட நபர்களிற்கு வழங்கி வருவதாகவும் மாவட்ட செயலகத்தின் இழுபறி நிலையே இதற்குக் காரணம் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் குறித்த விடயம் தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் வினவிய போது, குறித்த உதவிகள் உரிய காலப்பகுதியில் அவர்களிற்கு கிடைக்கப்பெறுவதாகவும், தனிமைப்படுத்தப்பட்டவர்களின் விபரம் திரட்டப்பட்டு வழங்கப்பட்டதன் பின்னர் உடனடியாக குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் தமக்கு முறைப்பாடு எதுவும் கிடைக்கவில்லை எனவும், அவ்வாறு கிடைத்தால் அதற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(4-8-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

12.05.2021
சித்திரை 29, புதன்கிழமை
பிரதமை பின்னிரவு 2.57 மணிவரை
கார்த்திகை பின்னிரவு 2.36 மணிவரை
சுபநேரம் 4.21-5.54 மணிவரை
இராகுகாலம் 11.54-1.24 மணிவரை
கார்த்திகை விரதம், அமிர்தசித்தம்

வளவன்


மேஷம்

கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், வாக்கு மேன்மையுண்டு.


ரிஷபம்

கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், கற்பனை மிகுதியான நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும்.


மிதுனம்

அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.


கடகம்

வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள், மற்றவர்கள் கடுமையாக நினைக்கும் வேலையொன்றை நீங்கள் எளிதாகச் செய்து முடிப்பீர்கள்.


சிம்மம்

கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், செய்தொழிலில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், ஆரோக்கியமான நாள்.


கன்னி

மறைமுக எதிர்ப்புகள் மாறும், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறும் வாய்ப்புண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


துலாம்

சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், முயற்சிகளில் சிறு தடைகள் ஏற்படலாம்.


விருச்சிகம்

வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டில் நம்பிக்கை கூடும், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.


தனுசு

வியாபார விரோதம் விலகும், கடன் சுமை குறைந்து கவலைகள் தீரும் நாள், புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு.


மகரம்

போட்டியாகச் செயற்பட்டவர் மனம் மாறுவர், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சுப செய்திகள் வந்து சேரலாம்.


கும்பம்

பெற்றோர் மீதான பிரியம் கூடும், சுப தகவல்கள் வந்து சேரலாம், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.


மீனம்

பகை விலகி பாசம் கூடும் நாள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

தோற்கும் நேரம் வீரர்கள் உண்டாக்கப்படுகிறார்கள்

# எதிர்கொள்ளத் தயார்

### சுகாதார சேவை பிரதிப் பணிப்பாளர்

(கொழும்பு)
கொவிட் நிலைமையில், எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக சுகாதார சேவை பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொவிட் பெருந்தொற்று தொடர்பில் எதிர்காலத்தில் ஏற்படவுள்ள எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்ளத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதமளவில் இலங்கையில் 21 ஆயிரம் கொவிட் மரணங்கள் பதிவாகும் என வோஷிங்டன் பல்கலைக்கழக கருத்துக் கணிப்பு ஒன்றின் மூலம் தகவல் வெளியிடப்பட்டமை குறித்து ஊடகங்கள் கேள்வி எழுப்பிய போது அதற்கு அவர் இவ்வாறு பதிலளித்துள்ளார்.

எதிர்வரும் காலங்களில் நோய்த் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்த போதிலும் அவர்களுக்கு சிகிச்சை வழங்கக்கூடிய ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் புதிதாக நோய்த் தொற்றாளர்கள் பதிவாவதனை கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-4)

# மரக்கறிகளின் விலை பன்மடங்கு அதிகரிக்குமா?



(ஹற்றன்)
மரக்கறிகளின் விலை 400 முதல் 500 வரை அதிகரிக்கலாம் என்று, நுவரெலியா விவசாயிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள விவசாயிகள், அரசாங்கம் இரசாயன உரவகைகளை இறக்குமதி செய்வதற்கு தடை விதித்திருக்கின்ற நிலையில், ஒரு சில வியாபாரிகள், இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு இலாபம் பெற முயற்சிப்பதாகவும் தங்களுடைய வியாபார நிலையங்களில் இரசாயன உரங்களையும் கிருமிநாசினிகளையும் பதுக்கி வைத்திருப்பதாகவும் விவசாயிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதுவரை காலமும் வழங்கப்பட்ட கழிவுத் தொகை வழங்கப்படுவதில்லை எனவும் என்ன விலை குறிப்பிடப்பட்டுள்ளதோ அதே விலைக்கே, உரங்களையும் கிருமிநாசினிகளையும் விற்பனை செய்கின்றார்கள் என்றும் இது தொடர்பாக கேள்வி கேட்டால் வேறு இடங்களில் சென்று பெற்றுக் கொள்ளுங்கள் என்று வியாபாரிகள் விவசாயிகளைக் கடிந்து கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இரசாயன உரவகைகளை தேவையான அளவுக்குப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை காரணப்படுவதால், ஒரு சில வியாபாரிகள் 50 கிலோ மூடைகளை விற்பனை செய்யாமல் மூடைகளை பிரித்து ஒருவருக்கு 5 கிலோ என்ற அடிப்படையில் விற்பனை செய்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

50 கிலோ மூடையை 1300 ரூபாய்க்கு விற்பனை செய்ய முடியும் என்றும் அதனை ஒவ்வொரு கிலோகிராமாக பிரித்து விற்பனை செய்தால், 50 ரூபாய்க்கு விற்பனை செய்ய முடியும் என்பதால், கிலோகிராம் கணக்கிலேயே உரங்களை விற்பனை செய்வதாகவும் விவசாயிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இதன் காரணமாக அறுவடை மிகவும் குறைவடைந்துள்ளதாகவும் இதனால் எதிர்வரும் காலங்களில் மரக்கறிகளின் விலைகள் 300 முதல் 400 அல்லது 500 ரூபாய் வரை விலை அதிகரிப்பதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் இருப்பதாகவே விவசாயிகள் கவலை வெளியிடுகின்றனர்.

எனவே இந்த விடயம் தொடர்பாக அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-4)

# தடுப்பூசிக்கு பயன்படவுள்ள 'இடுகம' கொவிட் நிதி

(கொழும்பு)
கொவிட் -19 சுகாதார மற்றும் சமூக பாதுகாப்பு நிதியத்தின் (இடுகம) தற்போதுள்ள 136 கோடியே 9 இலட்சத்து 22 ஆயிரத்து 696 ரூபாய் 24 சதம் இருப்பு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதி ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்ட மொத்த தொகை 175 கோடியே 24 இலட்சத்து 2 ஆயிரத்து 793 ரூபாய் 24 சதம் ஆகும். இதுவரை செலவிடப்பட்ட தொகை 39 கோடியே 14 இலட்சத்து 79 ஆயிரத்து 824 ரூபாய். இது சேகரிக்கப்பட்ட மொத்த தொகையில் 23 வீதம் ஆகும்.

நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்ட மொத்த தொகை - 175 கோடியே 24 இலட்சத்து 2 ஆயிரத்து 793 ரூபாய் 24 சதம்.

நிதியின் தற்போதைய இருப்பு - 136 கோடியே 9 இலட்சத்து 22 ஆயிரத்து 696 ரூபாய் 24 சதம்.

தடுப்பூசிகளுக்கு அரசாங்கம் செலவிட எதிர்பார்க்கும் தொகையுடன் ஒப்பிடும் போது மீதமுள்ள இருப்பு மிகவும் சிறிய தொகையாகும். எனினும் நிதியத்தின் இருப்பை தடுப்பூசிக்குப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை இந்த நிதியத்தின் முகாமைத்துவ சபை சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பாக பல்வேறு ஊடகங்களில் பரவிய தகவல்கள் உண்மையல்ல என்றும் 2020 ஆம் ஆண்டிற்கான நிதியத்தின் கணக்குகள் கணக்காய்வுக்காக தேசிய கணக்காய்வு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் நிதியத்தின் முகாமைத்துவ சபை தெரிவித்துள்ளது. (நி-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டமூல விவாதம் ஒத்திவைக்க வேண்டும்

## எதிர்க்கட்சி கோரிக்கை



(கொழும்பு)

18 ஆம் திகதி நடைபெற விருக்கும் கொழும்பு துறைமுக நகர சட்டமூலம் தொடர்பான பாராளுமன்ற விவாதம் ஒத்திவைக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

நேற்று கண்டியில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே ஐக்கிய மக்கள் சக்தியின்பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல இந்த கோரிக்கையை விடுத்தார்.

மேலும் அனைத்து கட்சி தலைவர்கள் கூட்டத்திலும் இந்தக் கோரிக்கையை முன்வைக்கவுள்ளதாக கூறினார்.

இதேவேளை கொரோனா தொற்று விகிதம் அதிகரித்து வரும் நிலையில் தடுப்பூசி திட்டம் குறித்து அரசாங்கம் அதிகளவில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல கேட்டுக் கொண்டார். (5-4)

# நகைக்கடைகளில் ஒன்றுகூடினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

(குருமன்காடு)

அட்சய திதியை முன்னிட்டு நகைக் கடைகளுக்குள் மக்களை கூட்டினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வைத்தியர் எம்.மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

கொவிட் தாக்கத்தின் மூன்றாவது அலையின் தாக்கமானது வவுனியாவில் வேகமாக அதிகரித்து வருகின்றது. அதனை கட்டுப்படுத்த அரசாங்கமும், சுகாதாரப் பிரிவினரும் இணைந்து மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அத்துடன் நாளை மறுதினம் 14 ஆம் திகதி அட்சய திதியாகும். அன்றைய தினம் பொதுமக்கள் நகைக் கடைகளுக்குள் அதிகமாக வரச் செய்வதை தவிர்க்குமாறு கேட்டுக் கொள்வதுடன், மக்களை கடைகளுக்குள் அதிகமாக திரட்டினால் சுகாதார நடைமுறைகள் தொடர்பில் தனிமைப் படுத்தல் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன் நகைக்கடைகளின் இடவசதி மற்றும் ஆட்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப 25 வீதமானவர்களுக்கு மட்டுமே கடைகளுக்குள் செல்ல அனுமதிக்கப்படும்.

நகைக்கடைகளில் மக்கள் அதிகம் கூடினால் குறித்த கடைகளுக்கு எதிராகவும், சுகாதார அறிவுறுத்தல்களை மீறி ஒன்றுகூடியவர்களுக்கு எதிராகவும் நடடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (5-4-250)

## தொடரூந்தில் பொதிகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

தொடரூந்தில் பொதிகளைக் கொண்டு செல்லும் செயற்பாடு மீள் அறிவித்தல் வரை இடைநிறுத்தப் பட்டுள்ளதாக தொடரூந்து திணைக்களம் அறிவித்துள்ளது. (நி-4)

# பெருநாள் தொழுகையை பள்ளிவாசல்களில் நடத்த வேண்டாம்

(கொழும்பு)

ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் தொழுகையை பள்ளிவாசல்களில் நடத்த வேண்டாம் என முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கை வக்பு சபையின் பணிப்புரைக்கமைய முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வேகமாக பரவும் கொவிட்19 தொற்று காரணமாக வணக்கஸ்தலங்களில் கூட்டுச்செயற்பாடுகளை தவிர்க்குமாறு கூறும் சுகாதார வழிகாட்டல்களையும் கருத்திற்கொண்டு, நாளை மறுதினம் ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாள் தொழுகையை எந்தவொரு பள்ளிவாசலிலும் நடத்தக்கூடாது என இலங்கை வக்பு சபை தீர்மானித்துள்ளது.

அதன் பிரகாரம் ஈதுல் பித்ர் தினத்தில் சகல பள்ளிவாசல்களையும் மூடிவிட்டு பெருநாள் தொழுகையை வீட்டில் தங்கள் குடும்பத்தாருடன் தொழுது கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது. (5-4)

# பசுமை பொருளாதார சமூகமாக மாற்ற புதிய செயலணி உருவாக்கம்

(கொழும்பு)

நாட்டை பசுமை பொருளாதார சமூகமாக மாற்றுவதற்கான ஜனாதிபதி செயலணி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றத்திற்கான நிலையான தீர்வுடன் பசுமை இலங்கையை உருவாக்குவதற்கான ஜனாதிபதி செயலணி என இந்த செயலணிக்கு பெயரிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியான பசில் ராஜபக்ஷவின் தலைமையில் இந்த செயலணி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

விவசாய நடவடிக்கைகளின் போது இரசாயன உரப் பயன்பாடு, கிருமிநாசினிகள் ஆகியவற்றிற்கு பதிலாக இயற்கை கிருமிநாசினிகள், உரங்கள் ஆகியவற்றை பயன்படுத்தி இயற்கை விவசாய திட்டத்திற்கு விவசாயிகளை மாற்றுவதும் அதற்கான வழிமுறைகளை பின்பற்றுவதும் இந்த ஜனாதிபதி செயலணியின் பிரதான கடமையாகும். (5-4)

# லட்சக்கணக்கான கணக்குகளை முடக்க எத்தனிக்கும் அரசாங்கம்

## தகவல் தொழில்நுட்ப சங்கம் அதிருப்தி

(கொழும்பு)

உரிமையாளர்கள் இல்லாத முகநூல் பக்கங்களை இடைநிறுத்தவோ அதனை கட்டுப்படுத்தவோ அரசுக்கு எந்த அதிகாரங்களும் இல்லை என இலங்கை தகவல் தொழில்நுட்ப சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் சுமார் 20 லட்சம் முகநூல் பக்கங்களுக்கு உரிமையாளர்கள் இல்லை என ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல எந்த அடிப்படையில் கூறுகிறார் என்பது சிக்கலுக்குரியது என அந்த சங்கத்தின் தலைவர் ரஜீவ் யசிரு குருவிட்டகே தெரிவித்துள்ளார்.

முகநூல் கணக்குகளை நீக்கவோ, அவற்றை முறைப்படுத்தவோ அல்லது கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கங்களுக்கோ, வேறு அணிகளுக்கோ அதிகாரம் இல்லையெனவும் சமூக ஊடக செயற்பாட்டாளர்களை அச்சுறுத்த அரசாங்கம் மேற்கொள்ளும் இப்படியான அறிவிலியான கருத்துக்கள் குறித்து இலங்கை தகவல் தொழில்நுட்ப சங்கம் தனது அதிருப்தியை வெளியிடுவதாகவும் குருவிட்டகே குறிப்பிட்டுள்ளார். (5-4)


# வெவ்வேறு தடுப்பூசிப் பயன்பாட்டின் முடிவிற்காக காத்திருக்கும் இலங்கை

(கொழும்பு)

கொரோனா தடுப்பூசிகள் தொடர்பில் வெளிநாடுகளில் உள்ள வல்லுநர்கள் நடத்திய சோதனைகளின் முடிவுகளை இலங்கை எதிர்பார்த்து காத்திருக்கிறது என்று சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

முடிவுகள் கிடைத்தவுடன் முதல் கொரோனா தடுப்பூசிகளுக்கு பதிலாக வெவ்வேறு தடுப்பூசிகளை பயன்படுத்துவது குறித்து இலங்கை முடிவெடுக்கும் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

சில நாடுகளில் தடுப்பூசிகளைக் கலந்து செலுத்தும் செயற்பாடு நடைமுறையில் உள்ளது. ஏனைய நாடுகளில் இரண்டு வெவ்வேறு தடுப்பூசிகளை கலப்பது குறித்து [illegible]




அமைச்சின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையில் 9 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு இந்தியாவில் உள்ள சீரம் நிறுவனத்தில் இருந்து அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், இந்தியாவில் எதிர்கொள்ளும் கொரோனா நெருக்கடி நிலைமை காரணமாக இந்தியாவினால் இரண்டாவது தடவையாக தடுப்பூசிகளை அனுப்ப முடியவில்லை.

தடுப்பூசிகளின் பற்றாக்குறை இலங்கைக்கு மாத்திரம் அல்ல. இதேபோன்ற நிலைமை வளர்ந்த நாடுகளிலும் எதிர்கொள்ளப்படுவதாக செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். இதன் விளைவாக வளர்ந்த நாடுகள் கூட தடுப்பூசிகளைக் கலந்து செலுத்துவதற்கான வாய்ப்பை பரிசோதனை செய்து வருகின்றன என்றும், சுகாதார அமைச்சின் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார். (5-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி அனுமதி வழங்கியது அமெரிக்கா

(வோஷிங்டன்)

**பைசர்-பயோஎன்டெக் கொரோனா வைரஸ் தடுப்பூசியை 12 முதல் 15 வயதுடையவர்களுக்கு பயன்படுத்துவதற்கு அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாகம் (F.D.A) அனுமதி அளித்துள்ளது.**




இது அமெரிக்காவில் தொற்றுநோயை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான முக்கியமான படியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.


வகுப்பறைகளில் கொரோனா வைரஸ் பரவுவதற்கான அச்சுறுத்தலைக் குறைப்பதன் மூலம் பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படுவதற்கான தடையை தடுப்பூசி நீக்குகிறது.

12 முதல் 15 வயது சிறுவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி போடப்படுவது உலக அளவில் இதுவே முதல் முறையாகும்.

இளம் பருவத்தினருக்கு சுமார் 20 ஆயிரம் தடுப்பூசி வழங்கத் தயாராக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி பிடன் தெரிவித்தார்.

12 முதல் 15 வயதிற்குட்பட்ட 2,260 பேரிடம் பைசர் - பயோஎன்டெக் தடுப்பூசி மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. (நி-4-8)

## கைகொடுக்கும் வைரமுத்து



(சென்னை)


கொரேனா நோயாளிகள் அதிகரித்துவரும் நிலையில் திருமண மண்டபங்களை வைத்தியசாலையாக மாற்றுவதற்கு முடிவெடுத்தால் தனது திருமண மண்டபத்தை கொடுத்து உதவிடத் தயார் என்று கவிப் பேரரசு வைரமுத்து தெரிவித்துள்ளார். (நி-4-8)

# விமானப் படையினரின் அதிரடி குண்டு வீச்சு

(ஜெருசலேம்)

இஸ்ரேல் ஆக்கிரமிப்பு பாலஸ்தீன பகுதிக்குள் இஸ்ரேலிய விமானப் படை நடத்திய வான் வழித் தாக்குதலில் குழந்தைகள் உட்பட குறைந்தது 21 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளதாக பாலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் பகுதிகளை நோக்கி பாலஸ்தீன விடுதலைக்காக போராடும் ஹமாஸ் அமைப்பு ரொக்கெட் தாக்குதல்களை நடத்தியதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.



இதனைத் தொடர்ந்து பாலஸ்தீன பகுதிகள் மீது இஸ்ரேல் விமானங்கள் நேற்று முன்தினம் கண்மூடித்தனமான குண்டு வீச்சு தாக்குதல்களை நடத்தியதில் குழந்தைகள் உட்பட 21 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில் அல்-அக்சா மசூதியில் கூடிய பாலஸ்தீனர்கள் மீது நேற்று முன்தினம் திங்கட்கிழமை இஸ்ரேல் பொலிஸார் தாக்குதல் நடத்தியது உலக நாடுகளை அதிர்ச்சியடையச்செய்துள்ளது. (நி-4-8)

# இந்தியாவில் பரவும் வைரஸ் கவலையளிக்கிறது- WHO

(ஜெனிவா)

பரவல் வேகம் அதிகரிக்கும் என்பது குறித்து எங்களின் முதல்கட்ட ஆய்வில் தெரிய வந்தள்ளது. இன்னும் இந்த வைரஸ் பற்றி ஆய்வு செய்ய அதிகமான தகவல்கள் பெறுவது அவசியம் என உலக சுகாதார அமைப்பின் தொழில்நுட்பக்குழுத் தலைவர் மருத்துவர் மரியா வான் கெர்கோவ் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

பி. 1.617 வகை உருமாற்ற கொரோனா வைரஸ் முதன் முதலில் இந்தியாவில் தான் கண்டு பிடிக்கப்பட்டது. இந்தியாவில் இந்த வைரஸ் பரவலின் வேகம் கவலையளிப்பதாக உள்ளது.

எங்களின் தொற்று நோய் தடுப்பு குழு, ஆய்வகக் குழுவினர் சேர்ந்து உலக சுகாதார அமைப்பின் வைரஸ் பரிணாம பணிக்குழுவுடன் இந்த உருமாறிய கொரோனா வைரஸ் குறித்து ஆலோசித்தோம்.

இந்த வைரஸின் பரவல் தன்மை, இந்தியாவில் பரவி வருவது, மற்ற நாடுகளில் பரவல் சூழல் ஆகியவை குறித்து ஆலோசித்தோம். இந்த ஆலோசனை மற்றும் ஆய்வில் பி-1617 வகை வைரஸ்களின் பரவல் வேகம் மற்ற வைரஸ்களைவிட அதிகரித்துள்ளது. இதனால் தான் உலகளவில் இந்தியாவில் பரவும் பி.1617 வகை வைரஸ் பற்றி ஆழ்ந்த கவலை உருவாகியுள்ளது.

இந்த வைரஸ் எவ்வளவு வேகமாகப் பதவுகின்றது என்பதைப்பற்றி எங்களுக்குத் தெரியும். இதுபற்றி இந்தியாவிடமும் தகவல்களைப் பகிர்ந்து கொள்வோம் என்று அவர் தெரிவித்தார். (நி-4-8)

# இந்திய மக்களை பாடாய்ப்படுத்தும் கொரோனா



(டில்லி)

இந்தியாவில் கொரோனா பாதிப்பு நிலவரம் குறித்த அறிக்கையை நேற்றுக் காலை மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டது.

இந்தத் தகவலின் படி இந்தியாவில் நேற்று முன்தினம் வரை கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 கோடியே 29 இலட்சத்து 92 ஆயிரத்து 517 ஆக உயர்ந்துள்ளது.

நேற்று முன்தினம் மட்டும் 3 இலட்சத்து 29 ஆயிரத்து 942 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் ஒரே நாளில் 3 ஆயிரத்து 876 பேர் மரணம் அடைந்துள்ளனர்.

இதன்மூலம் கொரோனா வைரஸால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 49 ஆயிரத்து 992 ஆக உயர்ந்துள்ளது. (நி-4-8)

**உலகளவில் கொரோனா**
**உயிரிழப்பு :3 319 284**
**தொற்று :- 159 659 186**
**(நேற்றைய நிலவரம்)**

# எமது நாட்டில் கொரோனா இல்லை

(பியாங்யாங்)

எமது நாட்டில் கொரோனா தொற்று இல்லை என்று வட கொரியா மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் கொவிட்-19 தொற்று சந்தேகத்தில் 25,986 பேரை பரிசோதித்ததாகவும் அதில் எவரும் கொரோனாத் தொற்றுக்குள்ளாகவில்லை என்பது கண்டறியப்பட்டுள்ளதாகவும் வடகொரியா உலக சுகாதார ஸ்தாபனத்திடம் கூறியுள்ளது.



வடகொரியாவின் சோதனை புள்ளிவிபரங்களில் ஏப்ரல் 23-29 காலங்களில் பரிசோதிக்கப்பட்ட 751 பேர் அடங்குவதாக உலக சுகாதார ஸ்தாபனம் ஒரு வார கண்காணிப்பு அறிக்கையில் கூறியது.

வடகொரியா கொவிட்-19 இற்கு எதிரான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சுற்றுலாப் பயணிகளைத் தடை செய்துள்ளது. இராஜதந்திரிகளை வெளியேற்றியது மற்றும் எல்லை தாண்டிய போக்குவரத்து மற்றும் வர்த்தகத்தை கடுமையாக தடைசெய்தது. (நி-4-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்ப்பிணிகளுக்கு தொற்று ஏற்பட்டால் குழந்தைக்கும் தொற்று ஏற்படலாம்

## வைத்திய நிபுணர் சுதத் சமரவீர



(கொழும்பு)

கர்ப்பிணிகளுக்கு தொற்று ஏற்படும் போது அவர்களுக்கு கொவிட் பாதிப்பு தீவிரமடைவதோடு, கர்ப்ப நிலையிலும் சிக்கல் ஏற்படுகிறது. இதனால் தொற்றுக்குள்ளான கர்ப்பிணியொருவர் பிரசவிக்கும் குழந்தைக்கும் தொற்று ஏற்படக்கூடும்.

எனவே கர்ப்பிணிகளும் கர்ப்பிணிகள் உள்ள வீட்டாரும் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று தொற்று நோயியல் பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

முன்னரை விட தற்போது சிறுவர்களுக்கும் அதேபோன்று கர்ப்பிணிகளுக்கும் அதிகளவில் தொற்று ஏற்படுகிறது.

கர்ப்பிணிகளுக்கு தொற்று ஏற்படும் போது அவர்களுக்கு கொவிட் பாதிப்பு தீவிரமடைவதோடு, பிரசவத்திலும் சிக்கல் ஏற்படுகிறது. எனவே தொற்றுக்குள்ளான கர்ப்பிணியொருவர் பிரசவிக்கும் குழந்தைக்கும் தொற்று ஏற்படக் கூடும்.

எனவே கர்ப்பிணிகளுக்கு ஏதேனும் அறிகுறிகள் தென்பட்டால் விரைவாக வைத்தியசாலைகளுக்குச் சென்று கொவிட் பரிசோதனைகளை முன்னெடுத்து தமக்கு தொற்று ஏற்பட்டுள்ளதா? இல்லையா? என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதேவேளை கர்ப்பிணிகள் உள்ள வீடுகளில் வசிக்கும் ஏனையோரும் இவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுக்க வேண்டும்.

தற்போதுள்ள நிலைமைக்கமைய ஒரே நேரத்தில் முழு நாட்டிலும் போக்குவரத்து கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய தேவை கிடையாது.

தற்போதுள்ள நிலைமையைக் கட்டுப்படுத்த முடியும். எனினும் நாளாந்தம் நாம் இவ்விடயங்களை மீளாய்வு செய்கின்றோம். மீளாய்வுகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த முறைமையை நாம் நடைமுறைப்படுத்துவோம்.

போக்குவரத்துக் கட்டுப்பாடுகளின் ஊடாக நபரொருவர் தான் வசிக்கும் பிரதேசத்திலிருந்து பிறிதொரு இடத்திற்குச் செல்வதை தவிர்க்க வேண்டும் என்பதையே எதிர்பார்க்கின்றோம்.

எனவே சட்டங்களை அமுல்படுத்தி சகல பிரதேசங்களையும் முடக்குவதைவிட ஒவ்வொருவரும் உணர்ந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்பதே பொறுத்தமானது.

நாட்டில் தற்போது கொவிட் தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் திட்டமிடலுடன் முறையாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. எந்தவொரு தடுப்பூசியும் காலாவதியாகவில்லை.

எனவே மக்கள் அனைவரையும் அச்சமின்றி தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். எதிர்வரும் நாட்களில் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டங்கள் வேகமாக முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (நி-4)

# கட்டுப்பாடுகளை கடுமையாக்க தீர்மானம்- சுகாதார அமைச்சர்

(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த கடுமையான முடிவுகளை எடுப்பதற்கு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தலைமையிலான கொவிட் ஒழிப்பு செயற்பாட்டு செயலணி முடிவெடுத்துள்ளது.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கொவிட்-19 ஒழிப்பு செயற்பாட்டு செயலணியின் மதிப்பீட்டு ஆய்வுக் கூட்டத்திலேயே இவ்வாறு கடுமையான முடிவுகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி பிற மாவட்டங்களிலும் கொவிட்-19 தடுப்பூசித் திட்டத்தை துரிதப்படுத்துதல்.

அனைத்து சுகாதார பிரிவுகளிலும் தற்போது செயற்படுத்தப்பட்டுள்ள



தடுப்பூசி மையங்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குதல்.

பி.சி.ஆர்.சோதனைகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரித்தல்.

தற்போது சோதனைக்காக சேகரிக்கப்பட்டு வரும் மாதிரிகளின் சோதனை அறிக்கைகளை விரைவாக வழங்க நடவடிக்கை எடுத்தல்.

பி.சி.ஆர்.சோதனைக்கு உட்பட்டவர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறுவதைத் தடுப்பதற்கான திட்டத்தை உருவாக்குதல்.

தற்போது அமைக்கப்பட்டுள்ள சிகிச்சை மையங்களுக்குத் தேவையான ஒட்சிசன் மற்றும் பிற வசதிகளை விரைவுபடுத்துவதற்கும், பிற மருத்துவ உபகரணங்களை விரைவில் மையங்களுக்கு வாங்குவதற்கும் நடவடிக்கையெடுத்தல்.

மாவட்ட அளவில் பி.சி.ஆர். ஆய்வகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

இது தொடர்பாக ஒரு அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (நி-4)

# இன்று ஒரு தகவல்

### தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## யாருக்குத் தேவை...?

ஒரு ஊரில் ஒரு யாசகன் இருந்தான். எப்பொழுதும் கையில் ஒரு திருவோடு வைத்திருப்பான். வீடு வீடாகப் போய் யாசகம் செய்வான். போடுவாங்க ...உண்டு விட்டுப் படுத்து விடுவான். இப்படி அவன் வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது.

ஒரு நாள் வழக்கம் போல் அவன் திருவோட்டைக் கையில் ஏந்திக் கொண்டு தெரு ஓரமாகப் போய்க் கொண்டிருந்தான்.

அப்பொழுது திருவோட்டிலே டொங் என்று ஒரு சத்தம் கேட்டது. என்ன என்று பார்த்தான். யாரோ ஒரு ரூபாய் நாணயத்தைப் போட்டிருந்தார்கள். அதைத் தனியாக எடுத்து துணியில் முடித்து வைத்துக் கொண்டான். அதற்குப்பின்பு சில வீடுகளில் அவனுக்கு வேண்டிய உணவு கிடைத்தது.

அதை எடுத்துக் கொண்டு வழக்கமாக தங்குகின்ற மண்டபத்திற்குப் போனான். அவனை மாதிரி உள்ள ஏனைய எல்லோரும் அங்கேதான் தங்குவது வழக்கம். எல்லோரும் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இவனுக்கு மட்டும் தூக்கம் வரவில்லை. அந்த ஒரு ரூபாய் நாணயத்தை கையில் வைத்துக் கொண்டே உட்கார்ந்திருக்கிறான். அதைப் புரட்டிப் பார்க்கிறான். கொஞ்சநேரம் ஆகிவிட்டது. பக்கத்திலே படுத்திருந்தவனை எழுப்பினான். நடந்ததைச் சொன்னான். இதைக் கேட்டுவிட்டு அவன் சொன்னான்...

இதோ பாரு நமக்கு உணவும் உடையும் தான் தேவை...அது இரண்டும் தான் நமக்குச் சுலபமாக கிடைத்து விடுகின்றது...அதனால் அதைத்தவிர மற்ற எல்லாமே நமக்குச் சுமை தான்.

இந்த நாணயம் நமக்கு வேண்டாத ஒன்று தான். இருந்தாலும் இது யாருக்கு அதிகமாக தேவைப்படுகின்றதோ அவர்களுக்குக் கொடுத்து விடு என்று ஒரு யோசனையைச் சொல்லிவிட்டு அவன் படுத்துத் தூங்கி விட்டான். ஆனால் இவனுக்கு இன்னமும் தூக்கம் வர வில்லை. இதை யாருக்குக் கொடுக்கிறது என்று யோசனை செய்து கொண்டே உட்கார்ந்திருக்கின்றான்.

விடிய ஆரம்பித்து விட்டது. அந்தச் சமயத்திலே தான் லேசாக தூக்கம். இப்பொழுது போர் முரசு ஒலிக்கின்ற சத்தம் கேட்கிறது. எல்லோரும் விழித்து எழுந்து போய் விட்டார்கள். இவன் மட்டும் தூங்கிக் கொண்டிருக்கின்றான். அருகில் போர் முரசு சத்தம் கேட்ட சமயத்தில் அவன் விழித்துக் கொண் டான். பரபரப்பாக எழுந்திருந்தான்.

கையில் காசு அப்படியே இருக்கு. எழுந்தான் தூரத்தில் ராஜா தேரிலே வந்து கொண்டிருந்தார். பின்னால் வரிசையாக போர் வீரர்கள். இவர்கள் போர் செய்வதற்கு என்ன காரணம் என்று கொஞ்சம் யோசித்துப்பார்த்தான். அதற்குள் தேர் நெருங்கி அருகில் வந்துவிட்டது.

உடனே இந்த யாசகன் என்ன செய்தான் தெரியுமா? தன் கையிலிருந்து நாணயத்தை அரசனின் தலைக்கு மேலாக தூக்கி யெறிந்தான். ஏதோ வந்து விழுகின்ற மாதிரி இருந்ததும் மன்னர் குனிந்து பார்த்தார். ஒரு ரூபாய் நாணயம்.

பக்கத்தில் இருந்த வீரர்கள் உடனே ஓடிப்போய் அந்த யாசகனைப் பிடித்துக் கொண்டு வந்து விட்டார்கள். விசாரணை நடந்தது.

நீ எதற்காக அப்படிச் செய்தாய்? என்று கேட்டார்கள். யாசகன் பதில் சொன்னான். என்ன நடந்தது என்பதை விபரமாகச் சொன்னான். அதற்குப் பின்பு சொன்னான்.

மன்னர் எதற்காக படையெடுத்துப் போகின்றார். வெற்றியும் பொருளும் தேடித்தான் அவர் வேறு நாட்டுக்குப் படையெடுத்துப் போகின்றார். அதனால் பணத்தின் தேவை அவருக்குத் தான் அதிகம் என்று முடிவு செய்தேன்.

அவரிடம் நேரில் இந்த நாணயத்தைக் கொடுக்கலாம் என்றால் என்னை நெருங்க விட மாட்டீர்கள். இந்த சமயத்தை விட்டால் இப்படிப்பட்ட வாய்ப்பு மறுபடியும் கிடைக்காது. அதனால் அப்படிச் செய்தேன். எனக்கு அதிகமாக சிந்திக்கவும் தெரியாது. நான் செய்தது தவறு என்றால் தண்டனை கொடுங்கள். ஏற்றுக் கொள்கின்றேன் என்கின்ற விபரத்தை மிகவும் பணிவாகச் சொன்னான்.

இதைக் கேட்டதும் மன்னனுக்கு அந்த யாசகனையும் புரிந்தது. தன்னைப் பற்றியும் புரிந்தது. இப்படி ஒரு கதை உண்டு. தேவைக்கு அதிகமாக இருக்கின்றது எதுவுமே ஒரு சுமைதான். சுமை எது என்று முடிவு செய்து அதை இறங்கி வைத்துவிடத் தெரிந்தால் என்றால் வாழ்க்கை சுகம் தான்.

தேவைக்கு அதிகமாக வைத்திருந்தார் ஒருத்தர். அவர் முன்னால் ஒரு நாள் சில யாசகர்கள் வந்து நின்றார்கள்.

ஐயா... நாங்கள் யாசகர்கள் சங்கம் என்ற ஒன்று ஆரம்பிக்கின்றோம். அதற்காக நிதி வசூல் செய்ய வந்திருக்கின்றோம். ஒரு நூறு ரூபா கொடுத்தீர்கள் என்றால் பரவாயில்லை என்றார்கள். அவருக்குக் கோபம் வந்துவிட்டது. நூறு ரூபாயா? அதெல்லாம் கொடுக்க முடியாது என்றார். சரி... ஒரு பத்து ரூபாயாவது கொடுங்கள் என்றார்கள்.

அதுவும் முடியாது என்றார். சரி ஒரு ரூபாயாவது கொடுங்க என்றார்கள். ஒரு பைசா கூட கொடுக்கமாட்டேன் என்றார்.

சரி அப்படி என்றால் நீங்களும் எங்கள் சங்கத்தில் ஒரு உறுப்பினராக சேர்ந்து கொள்ளுங்கள் என்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## இளவேனிற்கால வெள்ளரியும் அதன் மருத்துவ பண்புகளும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

**Botanical Name:-**
**Cucumis sativus**
**Family - Cucurbitaceae**
**Engl - Cucumber**
**Sinh - Pipinha**

உரோமங்களையுடையதும் சராசரி பருமனுடையதுமான ஒரு கொடித்தாவரமாகும். தனியிலை, ஒன்றுவிட்ட இலையமைப்பைக் கொண்டவை. 11 தொடக்கம் 16 செ.மீ.நீளமும் 14 செ.மீ.அகலமும் கொண்ட கோள வடிவ, இருதய வடிவ கூரிய முனைகளையுடைய இலைகளினைக் கொண்டது.

இலையின் இருபக்கங்களும் சுணைகளையுடையது. இலைக்காம்பு 5 தொடக்கம் 8 செ.மீ.நீளமுடையது. பூக்கள் ஒரு பாலானவை. பிரகாசமான மஞ்சள் நிறம் கொண்டவை. நீள்வட்ட வடிவான பெரிய பழங்களைத் தரும். விதைகள் தட்டையாக வெள்ளை நிறமானவை. இவ்விதைகள் கிட்டத்தட்ட 6 மி.மீ.நீறமானவை.

யாழ்.மாவட்டத்தில் தோட்டப்பயிராக பயிரிடப்படுகிறது. தை முதல் சித்திரை மாத காலப் பகுதியில் இனவிருத்தி செய்யப்படுகிறது.

எமது பிரதேச பருவகாலத்தை நோக்கும் போது பனிக் காலமும் மழை காலமும் அதிக அளவில் வெயில் காலமும் காணப்படுகிறது. இளவேனில், முதுவேனில் காலங்களில் அதிகளவு உஷ்ணமும் வரட்சியும் காணப்படும். எனவே நோய்கள், உடல் வறட்சி, கை, கால் வலி, அம்மைக் கொப்பளங்கள் போன்றவை அதிகமாகக் காணப்படும்.

இக்காலத்தில் குளிச்சியை ஏற்படுத்தக் கூடியவற்றைப் பயன்படுத்த வேண்டும். அதாவது உடலிலுள்ள பசித்தீயை சாந்தமாக்கி உடலிற்கு குளிர்ச்சியைக் கொடுக்கும் உணவுகளையும் மூலிகைகளையும் பயன்படுத்த வேண்டும். இதில் வெள்ளரிப்பழம், வெள்ளரிப்பிஞ்சு என்பன இப்பருவகாலங்களிலேயே கிடைக்கக்கூடியதாகவும் இருக்கும்.

வெள்ளரியானது பித்தப் பையில் வரும் கற்கள் பித்தப்பை சம்பந்தமான கோளாறு உடையவர்கள் வெள்ளரிப்பழம் கிடைக்கும் பருவகாலம் முழுக்கப் பயன்படுத்திவர சிறந்த பலனைக் கொடுக்கும். நாவரட்சி, தாகம், உடற்சூடு, பெண்களுக்குஏற்படும்வெள்ளை சாய்தல், சிறுநீர்த்தாரை அழற்சி, சிறுநீரக கற்கள், என்பு சம்பந்தமான பிரச்சினை உடையவர்கள் தாராளமாகப் பயன்படுத்த சிறந்த பலனைக் கொடுக்கும். இயற்கையான முறையில் என்புகளைப் பலப்படுத்தவும் சிறந்தது.

செரிமானத்தை சீராக்கும். மலச்சிக்கலை நீக்கக்கூடியது. வரட்டு இருமலுக்கும் வெள்ளரிப்பழமும் சிறந்தது. வெள்ளரி விதைகள் சிறுநீரகக் கற்களைக்கரைத்து, சிறுநீர்தொற்றை நீக்கி சிறுநீரை நன்கு வெளியேற்றக்கூடியது. கண்ணுக்கு குளிச்சியைத்தரும்.

வெள்ளரிப்பழங்களைப் பிரிக்கும் போது நிறைய விதைகள் பழச்சதையுடன் ஒட்டி இருக்கும். இவ்விதைகளை 2, 3 தடவை நீரில் நன்கு கழுவி ஒருநாள் முழுக்க வெயிலில் உலர விட வேண்டும். நன்கு உலர்ந்தபின்பு விதை உறைகளை தட்டி நீக்கி விதைக்குள் இருக்கும் பருப்புகளைச் சேகரித்து வைத்துப் பயன்படுத்தலாம்.

வெள்ளரிப் பிஞ்சுக்கு வாத, பித்த, கப முக்குற்றங்களும் நீங்கும். காய், பழத்தால் தினவு, சொறி, நீர்ச்சுருக்கு, கரப்பான் நீங்கும். இதை உணவு உண்ட பின் உண்ணப் பசியுண்டாகும். விதையால் சுருக்கின்ற நீரடைப்பு, கல்லடைப்பு, சதையடைப்பு, வெள்ளை, நீர் எரிச்சல் இவைபோம்.

பிஞ்சு

**"பிஞ்சு வெள்ள நிக்காய்க்குப் பேசு திரி தோடம்**
**போம்**
**வஞ்சியரே! முற்றிகாய் வாதமுமாம்-நைஞ்சகனி**
**உண்டாற் சயித்தியமாம் உள்ளிருக்கும் அவ்விதையைக்**
**கண்டாலும் நீரிறங்கும் காண்"**

காய்

**"உண்டருந்தத் தீ எழும்பும் உண்மருந்தை தான் முடுக்கும்**
**கண்டகரப் பானைக் கடுக்குந்காண் - பண்டிதரே**
**உள்ளரிப்பை நீர்க்கடுப்பை ஊரைவிடுத்தோட்டிவிடும்**
**வெள்ளரிக்காயின் குணத்தை விள்"**

விதை

**"கடுப்பொடு நீர்க் கட்டு வெறுந் கல்லடைப்பு தாரை**
**வெழுப்பு சதையடைப்பு மேகம் - எடுத்துரைக்க**
**உள்ளரிவி என்னுமுறை கிரிச்சர மிலைகள்**
**வெள்ளரி விதைக் கேகும் விள்"**

பிஞ்சு, காய் இலைகளை பச்சையாகவே உண்ணலாம். உடல் வெப்பம் மாறும். நீர்வேட்கை தணியும்.

300 கிராம் உரிக்காத பழத்திலுள்ள போசணைக் கூறுகள்

கலோரி 45
கொழுப்பு 0 கிராம்
காபோவைதரேற்று - 11 கிராம்
புரதம் - 2 கிராம்
நார்ச்சத்து - 2 கிராம்
ஈரலிப்பு 96%
உயிர்ச்சத்து C 14%
உயிர்ச்சத்து K 62%
மக்னீசியம் 10 %
பொட்டாசியம் 13%
மகனீஸ் 12%

வெள்ளரிப்பழமானது குறைந்த கலோரியையும் அதிகளவிலான உயிர்ச்சத்துக்கள் கனிமங்களையும் கொண்டது.

வெள்ளரிப் பிஞ்சை சிறுசிறு துண்டுகளாக நறுக்கி தயிர்ப் பச்சடியில் சேர்த்தோ மோரில் போட்டு தாளித்தோ அருந்தலாம். அல்லது சிறுசிறு துண்டுகளுடன் உப்பு, மிளகாய்ப் பொடி சேர்த்து உண்ணலாம். இதனால் சிறுநீர் எரிச்சல், அப்பகுதியில் ஏற்படும் அரிப்பு தீரும்.

வெள்ளரிப்பழங்களை தோல் சீவி தேவையான அளவு சீனி சேர்த்து மிக்ஸியில் அடித்து தேவையானால் குளிரூட்டியில்



வைத்தும் அருந்தலாம். அல்லது பழத்தைப் பிரித்து விதைகளை நீக்கி சர்க்கரை சேர்த்தும் சாப்பிடலாம்.

வெள்ளரிப்பழங்களை தோல் நீக்கி விதைகளையும் நீக்கி பழங்களை சுத்தமான கைகளால் பிசைந்து பசுப்பாலை நன்கு காய்ச்சி அதனுள் பிசைந்த பழங்களையும் தேவையான அளவு சீனியும் சேர்த்து கலந்து ஆறவிட்டு பருகவும். இப்பானத்தை அருந்திவர இரத்தத்திலுள்ள உஷ்ணத்தை குளிர்மையாக்கும். மலச்சிக்கலை நீக்கும். இதன் சாறு வயிற்றுப் புண்ணை ஆற்றவல்லது. இப் பழத்தில் நீர்ச்சத்து 96% உள்ளதால் வயிற்றெரிச்சலை உடனடியாகக் குணமாக்கவல்லது.

நன்றாக பழுத்த வெள்ளரிப் பழத்திலிருக்கும் சதைப்பகுதியை விதைகளை நீக்கி பிரித்தெடுத்து அதன் சாற்றை சிறிது உப்பும் மோரும் கலந்து அருந்த தாகம் தணிந்து புத்துணர்ச்சி உண்டாகும். சிறுநீர் நன்கு கழியும்.

பேரீச்சம் பழத்தையும் வெள்ளரிப்பழத்தையும் சேர்த்து கலந்துண்பதால் மருத்துவ குணமிக்க கலவையாகும். பேரீச்சம்பழம் உடலில் உஷ்ணத்தை உண்டுபண்ணும். வெள்ளரிப் பழம் குளிர்மையைத் தரும். இரண்டையும் சேர்த்துண்ண அனைவருக்கும் ஏற்ற உணவாக அமையும். மருந்தாகவும் மாறி விடுகிறது.

வாதுமைப்பருப்பு, வெள்ளரி விதைப்பருப்புகளை சூடான பாலில் போட்டு ஊறவைத்து தேன் சேர்த்து இளஞ்சூடான பதத்தில் அருந்த வேண்டும். உடல் பலவீனத்திற்கு சிறந்த பானமாகும்.

### வெள்ளரிப் பாயாசம்

வெள்ளரிப்பழத்தை தோல் சீவி விதைநீக்கி சிறுசிறு துண்டுகளாக நறுக்கி வைக்கவும். ஒரு கப் பச்சரிசியை ஊறவைத்து வடித்து வெள்ளரித்துண்டுகளுடன் சேர்த்து ஒன்றாக அரைத்து எடுக்கவும். ஒரு வாணலியை அடுப்பேற்றி சீனியும் நீரும் சேர்த்து பாகாகக் காய்ச்சி எடுக்கவும்.

பிறம்பான ஒரு வாணலியில் சிறிது நெய்விட்டு அதில் சிறிது சிறிதாக சொட்டாக வெட்டிய தேங்காயை வறுத்தெடுக்கவும். இதனுடன் முந்திரிகை வற்றல் சேர்த்து வறுத்து வைக்கவும்.

பின்பு ஒரு பாத்திரத்தில் சிறிது நீர் விட்டு அரைத்து வெள்ளரி கலவையைப் போட்டு அடுப்பேற்றி கலக்கிக்கொண்டு வர அதனுடன் பாகை கூட, முந்திரிகை வற்றல், தேங்காய்ச் சொட்டையும் சேர்த்துக் கொதிக்க வைத்து ஏலப்பொடி சேர்த்து பாயாசமாகத் தயாரித்து பருகவும். உடற்சூட்டைத் தணித்து தேக பலத்தை அதிகரிக்கும் பாயாசமாகும்.

### வெள்ளரிப்பழக்கேக்

6 துண்டு வெள்ளரிப்பழம், 8 பேரீச்சம்பழம், 20 வாதாம் பருப்பு, 4 மேசைக்கரண்டி கறுப்பு திராட்சைப்பழம், 1 கப் சீனி, 350 கிராம் கோதுமை மா.

வெள்ளரிப்பழத்தை மிக்ஸியில் போட்டு அரைத்து வைத்துக்கொள்ளவும். பேரீச்சம்பழம், வாதாம்பருப்பு, திராட்சைப் பழம் எல்லாவற்றையும் வெட்டி ஒரு மேசைக்கரண்டி கோதுமைமா சேர்த்து நன்கு கலந்து வைத்துக் கொண்டு பின்பு எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து கோதுமை மா, பட்டர், தேவையான சீனி சேர்த்து நன்கு அரைக்கவும். நன்கு அடித்து கொண்டுவரும் போது தயிரும் (சிறிதளவு) சேர்த்து சிறிதளவு வனிலாவும் சேர்க்கலாம். பின்பு பேக் பண்ணி எடுக்கவும். குழந்தைகட்கு சிறந்த சிற்றுண்டி உணவாகும். ஆரோக்கியமானதாகும்.

இக்கேக் மிகவும் மென்மையாகவும் இருக்கும். வெள்ளரிப் பழம் சாப்பிட முடியாத குழந்தைகட்கு கூட இதைத் தயாரித்துக் கொடுக்கலாம். இயற்கையானதும் ஆரோக்கியமானதுமாகும்.

வெள்ளரி விதைகளைப் பிரித்து உள்ளிருக்கும் பருப்பை வெற்றிலை, பாக்கு கலவையில் சேர்த்து உண்டால் குளிர்ச்சியைத்தரும். சமிபாட்டைத் தூண்டும். இரத்தத்தைச் சுத்தப்படுத்தும். நீர்க்கடுப்பு நீங்கும்.

உடலில் வயிற்றோட்டம், வாந்தி போன்ற நிலைமைகள் ஏற்பட்டு உடலில் நீர்ச்சத்து குறையும்போது வெள்ளரிக் காய்ச்சாறும் இளநீரும் சம அளவு கலந்து 2 மணி நேரத்திற்கு ஒருதடவை 60 மில்லி வரை அருந்தலாம். தோல் தொற்றுக்கள் ஏற்பட்டால் வெள்ளரிக்காய்ச் சாறு, அறுகம்புல் சாறு, கரட் சாறு மூன்றையும் சம அளவு கலந்து தினமும் ஒருவேளை குடித்து வரலாம்.

35 கிராம் விதைகளை நன்றாக அரைத்து 175 மில்லி நீரில் கரைத்து வடிகட்டி 30 மில்லிஅளவுதினமும்3வேளை குடிக்க சிறுநீரகக் கற்கள் கரைந்து சிறுநீர் நன்கு வெளியேறும். தொடர்ந்து 40 நாட்கள் இவ்வாறு பயன்படுத்திவரலாம்.

வெள்ளரிக்காயை அறுத்து அதைத் தினமும் முகத்தின் மீது பூசி வந்தால் முகத்தோலின் வறட்சி நீங்கும். முகப் பருக்கள் வராமலும் தடுக்கும். முகம் பளபளப்பாக அமையும்.

### வெள்ளரிப்பழக் கூட்டு

கடலைப்பருப்பு - தேவையான அளவு, வெள்ளரிப்பழம் - சிறுசிறு துண்டுகளாக வெட்டி எடுக்கவும். கடலைப்பருப்பை நன்கு 2 மணிநேரம் நீரில் ஊற விட்டு சட்டியை அடுப்பேற்றி நீர் விட்டு கொதித்துவர கடலைப்பருப்பைப் போட்டு நன்கு வெந்ததும் வெட்டிய வெள்ளரிப் பழத் துண்டுகளையும் போட்டு கொதிக்க விட்டு நன்கு வெந்து வர மஞ்சள்தூள், உப்பு, மிளகாய்த் தூள் சேர்த்து அவித்து இறக்கி வைத்துக்கொண்டு ஒரு வாணலியில் சிறிது நல்லெண்ணெய் விட்டு கடுகு, கறிவேப்பிலை, செத்தல்மிளகாய், வெங்காயம், பெருஞ்சீரகம் போட்டு தாளித்து பின்பு வடித்து மேற்கூறிய அவியலில் கலந்து கூட்டாக சாதத்துடன் சேர்த்து சாப்பிட்டுவர ஜீரணமண்டலம் பலப்படுவதோடு எமது சீதோஷ்ண நிலைமைக்கு ஏற்ற உணவுமாகும்.

**குறிப்பு:-வெள்ளரிப்பழம் கிடைக்கும் காலப்பகுதி வரை ஏதோ ஒரு முறையில் நாம்கட்டாயமாக உணவோ, மருந்தாகவோ பயன்படுத்தல் ஆரோக்கியத்திற்கு உகந்ததாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மீண்டெழுந்த யாழ்ப்பாண பொதுசன நூலகம்

## 37 நூல்களிலிருந்து அதன் வரலாற்றுத் தேடல்

திருமதி.சுகந்தினி சதாசிவமூர்த்தி பிரதம நூலகர், யாழ்ப்பாணம் பொது நூலகம்

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.






ஏழு ஆண்டுகளுக்குப் பின் யாழ்.பொது நூலகத்தில் பொருத்தப்பட்ட நினைவுக்கல் சம்பந்தமாக யாழ்.மாநகர முன்னாள் ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் பின்வருமாறு கூறியிருந்தார். நினைவுக் கல்லில் நூலகம் 14.02.2003 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் அந்தத் திகதியில் நூலகம் திறந்து வைக்கப்படவில்லை. சம்பிரதாயங்கள் ஏதுமின்றி 23.02.2004 இல் மாநகர ஆணையாளரால் மக்கள் பாவனைக்கு விடப்பட்டது. அவர் மேலும் குறிப்பிடுகையில், பல காரணங்களால் அத்திகதியில் நூலகம் திறந்து வைக்கப்படவில்லை. 31.12.2003 இல் எஞ்சிய வேலைகள் அநேகமானவை பூர்த்தி செய்யப்பட்டு மாநகர ஆணையாளரிடம் கையளிக்கப்பட்டதைத் தொடர்ந்து நூலகத்தை பொதுமக்களதும் மாணவ சமூகத்தினதும் பாவனைக்கு விடப்படாமை பொருத்தமானதுமல்ல, விருப்பத்தக்கதுமல்ல என்றும் சம்பிரதாயபூர்வமான திறப்பு விழாவொன்றை இனி எப்பொழுது மேற்கொண்டாலும் அது அரசியல் கலந்து சர்ச்சைக்குரியதாவே அமையும் என்றும் 15.01.2004 ஆம் திகதிக்குப் பின்பு பொருத்தமான ஒரு நாளில் யாழ்ப்பாண பொதுநூலகம் பொதுமக்களதும் மாணவர்களதும் பாவனைக்கு திறந்திருக்கும் என ஊடகங்கள் மூலமாக அறிவித்தல் வெளியிட்டு நூலகத்தை இயங்க வைக்க வேண்டும் என மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான தமிழ்பேசும் மக்களின் அமையத்தின் இணைப்பாளராகவிருந்த எம்மால் 03.01. 2004 ஆம் திகதி மாநகர ஆணையாளருக்கு கடிதம் எழுதப்பட்டது.

இதன்படி 23.02.2004 ஆம் திகதி ஊடக அறிவித்தல்களுக்கமைய சம்பிரதாயங்கள் ஏதுமின்றி மாநகரசபை ஆணையாளரால் நூலகம் மக்கள் பாவனைக்கு விடப்பட்டது. இதுவே உண்மையான நிகழ்வுப் பதிவாகும். காரணம் எதுவாகவிருப்பினும் வரலாற்றுப் பதிவுகள் சரியானதாகவும் உண்மையானதாகவும் இருத்தல் வேண்டும் என்பதை எவரும் மறுக்க முடியாது என்று கூறினார்.

திறக்கப்படாத கல் பெயர் பதாகை ஏன் வைக்கப்பட்டிருக்கிறது என்ற வாத விவாதங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்ததால் 2018 இல் வடமாகாண செயலகத்தில், நூலகத் திறப்பு விழாவிற்காக 2010 இல் பதிக்கப்பட்டிருந்த அந்த பெயர் கல் பதாகையை அகற்றப்பட வேண்டும் என தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அதன் பிரகாரம் 2020 இல் அந்நினைவுக்கல் அகற்றப்பட்டது.

### யாழ்.நூலகத்திற்கு ஆயிரம் நூல்களை இந்தியத் தூதரகம் வழங்கியது

யாழ்.நூலகத்திற்கு ஆயிரம் நூல்களை இந்தியத் தூதரகம் வழங்கும் நிகழ்வு 24.03.2003 இல் கொழும்பில் இந்திய கலாசார நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு அமைச்சர்கள், இராஜதந்திரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் யாழ்.மாநகர மேயர் செல்லன் கந்தையன் உட்பட மாநகர சபை உறுப்பினர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். இந்நூல்தொகுதி இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபம் சென்னினால் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரி முன்னிலையில் யாழ்.மாநகர சபை முன்னாள் மேயரிடம் கையளிக்கப்பட்டது.

### மீண்டெழுந்த யாழ். நூலகத்தின் தற்போதைய நிலை

1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி எரிக்கப்பட்ட யாழ். நூலகம், புனரமைக்கப்பட்டு 1984 இல் மீண்டும் திறக்கப்பட்டபோதும் போர்ச்சூழல் மற்றும் குண்டுத் தாக்குல் காரணமாக மீளவும் அழிவுற்றது. அதன்பின் திருத்தப்பட்டு 23.2.2004 ஆம் திகதி மீளவும் மக்கள் பயன்பாட்டிற்கு விடப்பட்டது. இரண்டாம் முறை இந்நூலகப் புனரமைப்பு வேலைகள் 1999 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இலங்கை அரசாங்கமானது பல சர்வதேச அனுசரணையுடன் இப் புனரமைப்பு வேலையை மேற்கொண்டது. இதற்காக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தலைமையில் ஜனாதிபதி நூலக ஆலோசனைக் குழு ஒன்று தொழிற்பட்டது.

கட்டடப் புனரமைப்பிற்குப் பிரபல கட்டடக் கலைஞர் வி.எஸ்.துரைராஜா நிறுவனம் முக்கிய ஆலோசகராகப் பணிபுரிந்தது. கட்டடங்கள் திணைக்களத்தின் நேரடியான செயற்பாட்டிலேயே புனரமைப்புப் பணிகள் நடைபெற்றன. புனரமைப்புப் பணிகள் நடைபெறும்போது திட்டமிடல் சார்பான ஆய்வுகளும் கலந்துரையாடல்களும் இடம்பெற்றன. அதற்கமைய நூலகம் இலங்கையில் ஒரு மாதிரி நூலகமாக உருவாக்கப்பட்டது. இந்நூலக உருவாக்கத்திற்குப் பல நிறுவனங்கள் உதவி வழங்கின. வடஇலங்கையில் ஒரு சிறந்த நூலகமாக உருவாகியுள்ளது. புனரமைக்கப்பட்ட நூலகம் கீழ்க்காணும் சேவைகளை தற்போது வழங்கி வருகின்றது.

### கீழ் மாடியில் (தரைத்தளத்தில் ) வழங்கப்படும் சேவைகள்..

1.தகவல் வழங்கும் பகுதி **(Information section)**

நூலகத்திற்கு வரும் வாசகர்களிற்கு நூலக விதிமுறைகள், சேவைகள் பற்றிய விளக்கம் அளித் தல். மற்றும் நூலகத்தினை பயன் படுத்தும் வாசகர்களுக்கான வாசகர் அட்டை வழங்குதல் போன்ற சேவைகள் இங்கு நடைபெறுகின்றன.

2. இரவல் வழங்கும் பகுதி - **(Lending section)**

நூலகத்தில் பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் இப்பகுதியிலேயே நூல்களை எடுத்துச் சென்று வாசிப்பதற்கு ஏற்ற வசதிகளை இப்பகுதி வழங்குகின்றது. இப்பகுதியில் ஏறத்தாழ 39,000 நூல்கள் (பல வகைப்பட்ட துறை சார்ந்து) உள்வாங்கப்பட்டுள்ளன.



யாழ் பொது நூலகத்திற்கு நூல்கள் கையளிக்கும் வைபவம் 24.03.2003 இல் கொழும்பு இந்திய கலாச்சார நிலையத்தில் நடைபெற்றது. இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபம் சென் உரையாற்றுவதையும். திரு.வீ. ஆனந்தசங்கரி வீற்றிருப்பதையும், தூதுவர் நிருபம் சென் முன்னாள் யாழ் மாநகர சபை முதல்வர் செல்லன் கந்தையனிடம் நூல் தொகுதியைக் கையளிப்பதையும் காணலாம்.

அதற்கு மேலாகச் சிறந்த நாவல்கள், சிறுகதைகள், மொழி பெயர்ப்பு நாவல்கள் எனப் பலவகைப்பட்ட நாவல்களும் இப்பகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பல வாசகர்கள் தம்மைப் பதிவு செய்து நூல்களைப் பெற்றுப் பயனடைகின்றனர்.

3. பருவ இதழ்பகுதி - **(Periodical section)**

பலவகைப்பட்ட பருவ இதழ்கள், பத்திரிகைகளை உடனுக்குடன் வாசிக்கக்கூடியதாக இப்பகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அத்தியாவசிய தேவைகளுக்கு பயணக் கட்டுப்பாடுகள் பொருந்தாது

(கொழும்பு)

நள்ளிரவு முதல் மாகாணங்களுக்கு இடையில் அமுல்படுத்தப்படும் பயணக்கட்டுப்பாடுகள் அத்தியாவசிய தேவைகளுக்கு பொருந்தாது என இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்தி ரசில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நேற்று முன்தினம் மே 30 வரை மாகாணங்களுக்கு இடையில் பயணக் கட்டுப்பாடுகளை விதிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

எனினும், இந்தக் கட்டுப்பாடுகள் அத்தியாவசிய சேவைகளுக்கு பொருந்தாது என்று இராணுவத் தளபதி தெரிவித்தார். (நி-4)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரதமுறைகள்



## விரதங்கள்

## பாவவினை போக்கும் தை அமாவாசை

(தொடர்ச்சி)

### விரதம் இருக்கும் முறை

பித்ருக்கள் மகாளய அமாவாசை அன்று மொத்தமாக கூடுகின்றனர். அந்த நேரத்தில் நாம் அவர்களை வணங்கி முன்னோர்களைத் திருப்தி செய்யும் வகையில் தர்ப்பணம் செய்வது அவசியம். ஆடி அமாவாசையன்று மூதாதையர்களை வரவேற்கும் நாம் தை அமாவாசையன்று விடைகொடுத்து அனுப்புகிறோம்.

இந்நாளில் தீர்த்த தலங்களுக்குச் சென்று எள், தண்ணீர் இறைத்து அவர்களின் தாகத்தைத் தீர்க்க வேண்டும். இவ்வாறு செய்தால் பித்ருக்களின் பாவங்கள் நீங்கி அவர்களுக்கு முக்திப்பேறு கிடைக்கும். ஏழை எளியவர்களுக்கு அன்னதானம், துணி தானம் செய்யலாம்.

காகம் வடிவில் மூதாதையர்கள் வீட்டுக்கு வருவதாக ஐதீகம். அதனால் காகத்துக்கு உணவு அளிப்பதும் முக்கியம். அன்று காலை ஆறு, கடல் போன்ற நீர் நிலைகளுக்குச் சென்று நீராடி தர்ப்பணம் கொடுக்க வேண்டும். காலை 6.30 மணிக்குள் தர்ப்பணம் கொடுப்பது நல்லது. ராகுகாலம், எமகண்டம் ஆகியவை தர்ப்பணத்துக்குப் பொருந்தாது. மதிய வேளை தர்ப்பணம் செய்ய மிகவும் உகந்தது.

பின்னர் வீட்டுக்குத் திரும்பி வந்து மறைந்த முன்னோர்களின் படத்தைச் சுத்தம் செய்து வடக்கு-கிழக்கு திசைகளில் வைத்து சந்தனம், குங்குமம் இட்டு துளசி மாலை சாத்த வேண்டும். முன்னோர்கள் பயன்படுத்திய பொருட்களை வைத்து குத்துவிளக்கு ஏற்ற வேண்டும்.

முன்னோர்களுக்குப் பிடித்தமான இனிப்பு, காரம், பழ வகைகளைப் படைக்க வேண்டும். தலை வாழை இலை படையல் போட்டு வணங்க வேண்டும். கோதுமை தவிடு, அகத்திக் கீரை போன்றவற்றைப் பசுக்களுக்கு வழங்கலாம். பித்ருக்களுக்குத் தர்ப்பணம் செய்து முடிக்கும் வரை வீட்டில் தெய்வ சம்பந்தமான பூஜைகளை ஒத்தி வைக்க வேண்டும்.

அதன்பிறகே தினசரி செய்ய வேண்டிய பூஜைகளைச் செய்யலாம். அமாவாசை அன்று ஒவ்வொரு வீட்டு வாசலிலும் அந்தந்த வீட்டு பித்ருக்கள் வந்து நின்று கொண்டு காத்து இருக்கிறார்கள். அவர்களுக்கு எள் கலந்த தண்ணீரைத் தர வேண்டும். இதனால் அவர்கள் மனம் மகிழ்ந்து ஆசீர்வதிப்பர்.

இவ்வாறு செய்யாவிட்டால் ஒருசில பித்ருக்கள் கோபத்துடன் சாபம் தந்து விட்டுச் செல்வதாகவும் கூறப்படுகிறது. ஆகவே தவறாது சிரார்த்தம் தர்ப்பணம் செய்ய வேண்டும். தமிழ் மாத பிறப்பன்று பித்ருக்களை வழிபட்டு சூரியனை வணங்க வேண்டும். நம் பித்ருக்கள் சக்தி நிறைந்தவர்கள். அவர்கள் ஆசீர்வாதத்தால் புண்ணியமும் செல்வமும் கிடைக்கும்.

அமாவாசை தினங்களில் மாமிசம் சாப்பிடக்கூடாது. வெங்காயம், பூண்டு ஆகியவற்றைத் தவிர்ப்பது நல்லது. தர்ப்பணம் செய்யும் போது கறுப்பு எள்ளை மற்றவர்களிடம் இருந்து கடன் வாங்கக் கூடாது. நீரில் இருந்து கொண்டு கரையில் தர்ப்பணம் செய்யக்கூடாது. அதைப் போல் கரையில் இருந்து கொண்டு நீரிலும் தர்ப்பணம் செய்யக்கூடாது.

தர்ப்பணம் எப்போதும் கிழக்கு முகமாகப் பார்த்தபடி தான் கொடுக்க வேண்டும். தன் முன்னோர்கள் மோட்சம் செல்லாமல் தவிப்பதைப் பார்த்த பகீரதன் கடும் சிரமப்பட்டு கங்கையைப் பூமிக்குக் கொண்டு வந்தான். அதன்மூலம் அவர்களுக்கு மோட்சம் அளித்ததாகப் புராணம் கூறுகிறது.

### முன்னோர்கள் ஆசி பெற

முன்னோர்கள் ஆசிபெற தை அமாவாசை மிகவும் புனித தினமாகும். அன்று கடல் கூடும் கன்னியாகுமரி, இராமேஸ்வரம், காவிரிக்கரையில் பவானி, திருவையாறு, திருச்சி, அம்மாமண்டபம் ஆகிய இடங்களுக்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் சென்று முன்னோர்களுக்கு திதி கொடுப்பர். இராமேஸ்வரத்தில் ராமநாத சுவாமி அம்பாளுடன் ஊர்வலமாகச் சென்று அக்னி தீர்த்தத்தில் புனித நீராடல் நடைபெறும். நெல்லை நெல்லையப்பர் கோவிலில் தை அமாவாசையன்று லட்ச தீபம் ஏற்றப்படும்.

வேதாரண்யம் கோவிலில் உள்ள மணிகாணிகைத் தீர்த்தத்தில் நீராடினால் கங்கை, யமுனை போன்ற புண்ணிய நதிகளில் நீராடியதற்குச் சமம். தை அமாவாசையன்று முன்னோர்களுக்கு திதி கொடுத்து உணவு, புத்தாடை படைத்து வழிபாடு செய்ய வேண்டும்.

அந்த ஆடை, உணவை ஏழைகளுக்குத் தானமாக வழங்க வேண்டும். இதன்மூலம் முன்னோர் ஆசி கிடைக்கும். தடைப்பட்ட திருமணம், நீண்ட நாட்பட்ட நோய் நொடிகள், மன[illegible] சந்தோசமும் [illegible] கிடைக்கும். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தித்துளிகள்

## தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய மேலும் 548 பேர் கைது

(கொழும்பு)

நாட்டில் அமுலிலுள்ள தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறி செயற்பட்ட மேலும் 548 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் முகக்கவசம் அணியத் தவறியமை உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றத் தவறியவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதற்கமைய நாட்டில் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 7.864 பேர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## 20,000 பேருக்கு சினோபார்ம்

(கொழும்பு)

20,000 இற்கும் மேற்பட்ட இலங்கையர்களுக்கு இதுவரை சினோபார்ம் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

அந்த வகையில் நேற்று முன்தினம் நிலவரப்படி 20,710 இலங்கையர்களுக்கு முதலாம் கட்ட சினோபார்ம் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளதோடு சீன பிரஜைகள் 5,300 பேருக்கும் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. (நி-4)

## கொரோனா அச்சம் ஆடைத் தொழிற்சாலை பூட்டு

(மஸ்கெலியா)

மஸ்கெலியா சுகாதார வைத்திய அதிகார பிரிவுக்குட்பட்ட நோர்வூட் நிவ்வெளி ஆடைத்தொழிற்சாலையில் மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையின் மூலம் ஒன்பது பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டதனைத் தொடர்ந்து காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 140 | 120 |
| பச்சைமிளகாய் | 100 | 80 | 100 |
| தக்காளி | 140 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 |
| கோவா | 100 | 120 | 100 |
| கரட் | 140 | 180 | 160 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 80 | 140 | 60 |
| வாழைக்காய் | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 260 | 200 | 220 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 120 |
| பாகற்காய் | 150 | 150 | 140 |
| வெண்டிக்காய் | 80 | 70 | 60 |
| கருணைக் கிழங்கு | 120 | 130 | 120 |
| பயற்றங்காய் | 120 | 160 | 100 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 |
| பீற்றூட் | 80 | 80 | 80 |
| கறிமிளகாய் | 120 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 350 | 350 | 300 |
| போஞ்சி | 120 | 180 | 160 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 80 |
| கீரை - 1 பிடி | 60 | 60 | 30 |
| தேசிக்காய் | 140 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 60 | 40 |
| இராசவள்ளி | 250 | 220 | 200 |
| வெங்காயப்பூ | 300 | -- | -- |
| முள்ளங்கி | 80 | 70 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 70 | 20 |
| ஈரப்பலா | 60 | -- | 80 |



# சிறுவர் அரங்கம்

## பிரிவு

சக்கரவர்த்தியும், பீர்பாலும் நெருங்கிய நண்பர்கள். பீர்பால், வேடிக்கையாகப் பேசக் கூடியவர் விநோதமாகவும் செயற்படுவார்.

அரசாங்க பிரச்சினைகளாலும் போர்களாலும் அக்பர், அடிக்கடி சலித்துப் போய் விடுவார். அப்போது எல்லாம் பீர்பால் தமது வேடிக்கைப் பேச்சுகளால் அக்பரின் மன இறுக்கத்தைப் போக்கி இலகுவாக்கிவிடுவார்.

ஆகவே, அக்பரும் பீர்பாலும் தினமும் உரையாடிக்கொண்டே உலாவுவதை வழக்கமாக வைத்திருந்தனர்.


பீர்பால் நீண்ட காலமாக அக்பருடன் நெருங்கிப் பழகியதால் அவரை பரிகாசம் செய்யும் அளவிற்குத் துணிச்சல் பெற்றிருந்தார்.

ஆனால், ஒருமுறை அவர் எல்லை மீறி ஏதோ துடுக்காகச் சொல்ல, அக்பரின் சுய கௌரவம் விழித்துக்கொண்டது.

“என்னைக் கேலி செய்யும் அளவிற்குப் போய் விட்ட இந்த பீர்பால் யார்? ஆலோசகர் என்ற பெயரில் என்னிடம் சம்பளம் வாங்கிப் பிழைப்பவர் தானே” என்ற எஜமான உணர்வு தலை தூக்கியது.

“பீர்பால்! உமக்குத் திமிர் அதிகரித்து விட்டது. என் கண் முன்னே நிற்காதீர்கள்.

இந்த நகரத்தை விட்டு வெளியேறுங்கள்,” என்று கோபமாகக் கட்டளையிட்டார் அக்பர்.



பீர்பால் மறுபேச்சின்றி அந்த இடத்தை விட்டு அகன்றார். நாட்கள் பல ஓடின. பீர்பால் இல்லாமல் அக்பருக்கு வாழ்க்கை சுவையிழந்து போய் விட்டது.


அரசாங்க பிரச்சினைகளையும் குடும்பக் கவலைகளையும் பற்றி அவர் பீர்பாலிடம் மனம் விட்டுப் பேசியதுபோல் வேறு யாரிடமும் சுதந்திரமாகப் பேசமுடியவில்லை.

அக்பர் தன்னிடம் சொன்ன எந்த இரகசியத்தையும் யாரிடமும் வெளியிடமாட்டார் பீர்பால். நகைச்சுவையாகப் பேசினாலும் அவரது ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

வயதில் பெரியவராதலால் “அவர் வேடிக்கையாகப் பேசியதற்குக் கோபித்திருக்கக் கூடாது” என்று அக்பருக்குத் தோன்றியது.

(தொடரும்)

# மகாபாரதம்




“எப்போதும் எனக்கு எதிராய் பேசுவது இவரின் இயல்பு. அருச்சுனன் பற்றி இவர் பெரிதாக நினைக்கிறார்.

இவர் அருச்சுனனிடம் தோல்வி அடையும் வரை நான் போரில் இறங்கமாட்டேன்.

பின் அருச்சுனனை நான் போரில் கொல்வேன்”என்று கூறிவிட்டு சபையிலிருந்து வெளியேறினான் கர்ணன்.

துரியோதனனிடம் பிடிவாதத்தை விடுமாறு திருதராட்டிரன் கூறியும்அவன் கேட்கவில்லை.

“தந்தையே! நான் அனைத்து விடயமும் அறிந்தவன். இந்த பாண்டவர்கள் சூதாடித் தோற்ற போதே ஏன் போருக்கு கிளர்ந்து எழ வில்லை.

அவர்களுக்கு மான உணர்ச்சி கிடையாது. சபதம் என்ற பெயரில் வீரவாதம் புரிந்தனர்.

தருமர் ஒரு முறை சூதில் தொலைத்தவர் மீண்டும் இரண்டாம் முறை ஏன் சூதாட வேண்டும்.

கிருஷ்ணனின் துணை இப்போது இருப்பதால் போரிடத் தயார் என்கிறார்கள்.

போர் தொடங்கட்டும் பார்ப்போம். என்னிடம் 11 அக்ரோணி படை உள்ளது. அவர்களிடம் 7 மட்டுமே உண்டு.

அவர்களுக்கு வெற்றி கிடைக்கும் என நான் எண்ணவில்லை. அதனால்தான் 5 ஊர்கள் போதும் என கெஞ்சிக் கேட்கிறார்கள்.

தந்தையே 5 ஊசி முனை அளவு நிலம் கூட அவர்களுக்கு நான் தரமாட்டேன்” என்று கூறிக் கர்ணனைப் போல் அவனும் அவையை விட்டு வெளியேறினான்.

### கிருஷ்ணன் தூது

சஞ்சயன் தூதாக வந்து சென்றபின் தருமர் எதற்கும் துரியோதனனுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு கொடுத்து பார்ப்போம் என்றார். அதற்கு கிருஷ்ணன் தயாரானார்.

ஆனால் பீமன் கொதித்தெழுந்தான். “சமாதானம் வேண்டாம். போர்தான் வேண்டும்” என்றான்.

அருச்சுனன், நகுலன், சகாதேவனும் சமாதான முயற்சியை விரும்பவில்லை. திரௌபதியும் அழுதவாறே துரியோதனன் சபையில் தான் பட்ட வேதனையை நினைவூட்டினாள். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*அகங்காரம் பலவீனமாகும். அது அமைதியை அழித்து விடும்!*

*– சுவாமி சிவானந்தா*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஒருபுறம் வேடன்; மறுபுறம் நாகம் இரண்டுக்கும் நடுவே அழகிய சைவ சமயம்

முல்லைத்தீவு குருந்தூர்மலையில் நேற்றைய தினம் புத்தர் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

நீண்ட நெடுங்காலமாக ஆதிசிவ வழிபாடு நடக்கின்ற குருந்தூர்மலையில் அடாவடித்தனமாக புத்தர்சிலையைப் பிரதிஷ்டை செய்தது எந்தவகையிலும் நியாயமாகாது.

சிவத்தலம் இருக்கின்ற இடங்களைத் தமதாக்குகின்ற வில்லங்கத்தனத்தில் சிங்கள ஆட்சியாளர்களும் பௌத்த துறவிகளும் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன்வரிசையில் குருந்தூர்மலையில் புத்தர்சிலை நேற்றைய தினம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலங்களில் நெடுங்கேணி வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம், உருத்திரபுரம் சிவன் ஆலயம் எனப் படிப்படியாக பௌத்த விகாரைகள் ஆக்கிரமிக்கப் போகின்றன என்பதுதான் உண்மை.

இவ்வாறாக இலங்கையின் ஆதிச்சமயமாகிய சைவசமயத்தின் தொன்மைச் சான்றுகளை வேரறுத்து இலங்கையின் ஆதிச்சமயம் பௌத்தம் என்பதை நிரூபிக்க பௌத்த மதவாதிகள் ஒருபக்கம் கடும் பிரயத்தனம் செய்து கொண்டிருக்க,

மறுபக்கத்தில் சில சபைகள் சைவ சமயத்தவர்களை மதம் மாற்றுவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

அத்தகைய அமைப்புகளுக்கு அரச மட்டத்தில் மிகப்பெரும் செல்வாக்கு உண்டென்பதும் இங்கு நினைவுபடுத்தற்குரியது.

என்ன செய்வது ஆளுந்தரப்போடு சேர்ந்து பயணிக்கின்ற தமிழ் அரசியல்வாதிகளால் இதுபற்றி வாய் திறக்கவே முடிவதில்லை.

அவர்களைப் பொறுத்தவரை இதுபோன்ற விடயங்களில் மௌனமாக இருப்பதுதான் தங்களின் அரசியலுக்கு ஆரோக்கியம் என்று அறிந்து வைத்துள்ளனர்.

ஆகையால் அவர்கள் குருந்தூர்மலை பற்றியோ வெடுக்குநாரி ஆதிலிங்கேஸ்வரர் பற்றியோ வாய்திறக்கப் போவதில்லை.

சரி பரவாயில்லை என்றால், அரசாங்கத்துடன் மிக நெருக்கமாக இருந்து அவர்களுக்கு வேதம் ஓதி ஆசிவதிக்கின்றவர்கள் ஏதேனும் கதைப்பார்களா? என்றால் இல்லை.

ஆக, இலங்கை வேந்தன் இராவணேஸ்வரன் அணிந்த திருநீற்றுக் கலாசாரமும் சிவவழிபாட்டு மரபும் இந்த மண்ணை விட்டு விடைபெறப் போகின்றன.

இதற்குக் கட்டியம் கூறுவதுபோல சர்வதேசப் பாடசாலைகள் சைவ சமயத்தையும் தமிழையும் ஓரங்கட்டி ஈழத் தமிழினத்தை மேலைத்தேய நாகரிகத்துக்குள் வலுக்கட்டாயமாக இறக்கிவிட முற்பட்டுள்ளன.

ஆம், சைவ சமயத்தை அழித்து அதனூடு தமிழ் மொழியை அழிக்கின்ற பெரு முயற்சி நடப்பதைக்கூட எம்மவர்கள் உணராமல் இருக்கின்றபோது, நாம் என்ன செய்ய முடியும்.

ஒருபுறம் வேடன். மறுபுறம் நாகம். இரண்டுக்கும் நடுவே இலங்கையில் சைவ சமயம் காப்பாற்றுவார் யாருமின்றி விக்கித்துக் கிடக்கின்றது.

# நிர்மாணப்பணிகளை ஆரம்பிக்கமுன் மக்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும்

## ஆளுநர் சார்ள்ஸ்

(குப்பிழான்)

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுடன் மேற்கொள்ளப்படும் ஐ. வீதித் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று செவ்வாய்க்கிழமை வடமாகாண ஆளுநர் திருமதி பி. எஸ்.எம். சார்ள்ஸ் தலைமையில் வடமாகாண ஆளுநர் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் பிரதம செயலாளர் , ஆளுநரின் செயலாளர் , உதவிச் செயலாளர், இணைப்புச் செயலாளர், உள்ளூராட்சி ஆணையாளர், மாநகரசபை ஆணையாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள், திணைக்கள அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மேற்படி கலந்துரையாடலில் வடமாகாணத்தில் இடம்பெறும் 17 ஒப்பந்தத் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடிய வடக்கு ஆளுநர் வீதி அமைப்பதற்கான திட்டங்களினை வகுக்கும்போது கழிவு நீர் வடிகாலமைப்பு , மின்சாரம் , நீர் வடிகாலமைப்பு என்பவற்றினைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

மேலும். எதிர்காலத்தில் இவ்வாறான பிரச்சினைகளினைத் தவிர்க்கும் முகமாக நகரசபை, மாநகர சபை மற்றும் பிரதேச சபை ஆகியன வீதி நிர்மாணப் பணிகளைத் தொடங்குவதற்கு முன்னர் குறித்த பகுதிகளில் வசிக்கும் மக்களுடன் கலந்துரையாடி தேவையான இடவசதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்ததுடன் சபைகள் கட்டடங்களுக்கான அனுமதியை வழங்கும் போது எதிர்கால அபிவிருத்தி தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும் எனவும்கேட்டுக்கொண்டார். (5-4-18)

# கிராம சேவகர் பிரிவுகளை முடக்குவதால் கோவிட் பரவலைத் தடுக்க முடியாது

## — மருத்துவ நிபுணர்கள் சங்கம் சுட்டிக்காட்டு —

(கொழும்பு)

இலங்கையில் கிராம சேவகர் பிரிவுகளை முடக்குவதால் கொரோனா வைரஸ் பரவலைத் தடுக்கவோ, பொருளாதார நடவடிக்கைகளைப் பாதுகாக்கவோ முடியாது என்று மருத்துவ நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மருத்துவ நிபுணர்கள் சங்கம், ஜனாதிபதி கோட்டாபயு ராஜபக்சவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இதனைக் குறிப்பிட்டுள்ளது.

மாகாணங்களுக்கு இடையில் மட்டுமல்ல உடனடியாக மாவட்டங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகளையும் விதிப்பதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் குறித்த சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

இலங்கையின் கொரோனாத் தடுப்பு மூலோபாயங்களை அரசு மீள்பரிசீலனை செய்ய வேண்டிய கட்டத்தை அடைந்துள்ளது எனவும் மருத்துவ நிபுணர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தேவையான முன்னேற்பாடுகளை எடுக்கத் தவறும் போது, நாட்டில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த முடியாமல் போகலாம் என்றும், எதிர்வரும் வாரங்களில் ஒரே நாளில் 10 ஆயிரம் நோயாளர்கள் பதிவாகக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது எனவும் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மருத்துவ நிபுணர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (ம-3)


## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 13 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** ஆலங்குளம் 653 படைப்பிரிவு இராணுவமுகாம், ஆலங்குளம் இராணுவமுகாம், ஆலங்குளம், தேராங்கண்டல் ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** குருக்கள் புதுக்குளம்- மணியர்குளம், மகாக்கச்கொடிய ஆகிய பிரதேசங்களிலும் மின் சாரம் தடைப்படும். (நி-4)

# ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



## குருவும் சீடரும்

ம-(ஸ்ரீராமகிருஷ்ணரிடம்): 'சுவாமி, அருவம்தான் எனக்குப் பிடித்திருக்கிறது.'

ஸ்ரீராமகிருஷ்ணர்: 'அது நல்லது. ஒன்றில் நம்பிக்கை இருந்தாலே போதும். உனக்கு அருவத்தில் நம்பிக்கை. அது நல்லது. ஆனால் அது ஒன்றுதான் உண்மை, மற்றவைபொய் என்ற எண்ணத்திற்கு இடம் கொடுக்காதே. அருவமும் உண்மை, அதுபோல் உருவமும் உண்மை் இதை நினைவில் வைத்திரு. ஆனால் உனக்கு எதில் நம்பிக்கையோ அதைப் பிடித்துக்கொள்.'

இறைவனுக்கு அருவம், உருவம் ஆகிய இரண்டு நிலைகளும் உண்மை என்பதைத் திரும்பத்திரும்ப கேட்ட ம- ஆச்சரியம் அடைந்தார். இந்த விடயம் அவர் படித்த ஏட்டுக் கல்வியில் இல்லையே!

ம-வின் அகங்காரத்திற்கு மூன்றாவது முறையாக அடிவிழுந்தது. ஆனாலும் அது அடியோடு அழிந்துவிடவில்லை. ஆகவே அவர் இன்னும் சிறிது வாதிடத் தயாரானார்.

ம- சுவாமி, இறைவன் உருவம் உடையவர் என்றே வைத்துக்கொள்வோம், அப்படியும் அவர் களிமண் பொம்மையாக இருக்க முடியாது அல்லவா?' (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசின் ஆணவமே மூன்றாவது அலை ஏற்படக் காரணம்

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்தின் ஆணவமான மற்றும் தன்னிச்சையான நடவடிக்கை காரணமாக இலங்கை கொவிட்டின் மூன்றாவது அலையை எதிர்கொண்டுள்ளதாக ஜே.வி.பி குற்றம்சாட்டியுள்ளது.

இது தொடர்பாக அந்த கட்சியின் மத்திய குழு உறுப்பினர் மருத்துவர் நளிந்த ஜெயதிஸ்ஸ தெரிவிக்கையில்,

அதிகரித்துச் செல்லும் கொரோனாத் தொற்றை அடுத்து நாடு முழுமையாக முடக்கப்படாது என்ற முடிவை எடுக்குமாறு இராணுவத் தளபதிக்கு யார் அழுத்தம் கொடுத்தது என கேள்வி எழுப்பியுள்ளார்.

குறிப்பாக சுகாதாரத் துறை கொவிட் தொற்றை குறைப்பது தொடர்பில் விஞ்ஞான அடிப்படையில் முடிவுகளை எடுத்து வருவதாகவும், தற்போது அந்தந்த மாகாணங்களுக்குப் பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் மருத்துவ அதிகாரிகள் உள்ளிட்ட அதிகாரிகளின் வேண்டுகோள் நாட்டை முடக்க வேண்டும் என்பதாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

எனினும் இராணுவத் தளபதியின் அறிவுறுத்தல்கள் அல்லது கோரிக்கைகளின் அடிப்படையில் முடிவுகளை எடுப்பதில்லை.

அரசாங்கத்தின் இந்த ஆணவமான மற்றும் தன்னிச்சையான நடத்தை காரணமாக இலங்கை கொவிட்டின் மூன்றாவது அலையை எதிர்கொண்டதாக அவர் குற்றம் சாட்டினார். (நி-4)

# ஒரு நாளில் 30 ஆயிரம் பி.சி.ஆர்கள்

(கொழும்பு)

ஒரு நாளைக்கு நடத்தப்பட வேண்டிய பி.சி.ஆர்.பரிசோதனைகளின் எண்ணிக்கையை 24 ஆயிரத்தில் இருந்து 30 ஆயிரமாக உயர்த்த சுகாதார அதிகாரிகள் திட்டமிட்டுள்ளனர்.

தற்போது ஒரு நாளைக்கு 24 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பி.சி.ஆர்.சோதனைக்ள் நடத்தப்படுகின்றன.

எனினும் நாட்டில் அதிகரித்து வரும் கொவிட் -19 நிலைமையைச் சமாளிக்க அதை சுமார் 30 ஆயிரம் ஆக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளதாக அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார். பி.சி.ஆர். சோதனை முடிந்ததும் முடிவுகள் வெளிவரும் வரை மக்களை தனிமைப்படுத்தலில் இருக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (நி-4)

# வெள்ள அபாயத்தை அறிய கருவிகள் பொருத்தல் ஆரம்பம்

(இரத்தினபுரி)

இரத்தினபுரி மாவட்டத்தில் அடிக்கடி ஏற்படும் வெள்ள அனர்த்தத்தில் இருந்து பொதுமக்களைப் பாதுகாக்கும் நோக்கில், வெள்ளம் அபாயம் தொடர்பில் முன்கூட்டியே அறிந்து கொள்வதற்கான கருவிகளைப் பொருத்தும் நடவடிக்கையில், நீர்ப்பாசனத் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

இந்தக் கருவிகளினூடாக, களுகங்கை உட்பட அதன் கிளை ஆறுகளின் நீர் அளவை 24 மணித்தியாலங்களும் அறிந்துகொள்ள முடியுமான நீர்ப்பாசனத் திணைக்களத்தின் இரத்தினபுரி மாவட்டப் பொறுப்பாளர் அநுர சமரதுங்க தெரிவித்தார். (நி-4)

# நித்திரையில் உயிரிழந்தவருக்கு கொரோனா தொற்று உறுதி

(கொழும்பு)

இரவு உணவை உட்கொண்ட பின்னர், நித்திரைக்குச் சென்ற 71 வயதான நபரொருவர் நித்திரையிலேயே உயிரிழந்த சம்பவம் காலி அஹுங்கம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

அவரது மனைவி தேநீருடன் சென்று அதிகாலை 5.30 மணிக்கு எழுப்பியுள்ளார்.

எனினும், அவர் எழும்பவில்லை, எவ்விதமான அசைவுகளும் அவரிடம் தென்படவில்லை. அதனையடுத்து அவசர அம்புலன்ஸ் வண்டிக்கு அழைப்பை ஏற்படுத்தியுள்ளார்.

எனினும், அக்கம் பக்கத்தினர், ஓடோடிவந்து அவரை எழுப்பியுள்ளனர். எனினும், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்பது தெரியவந்தது.

இதனையடுத்து சடலம், காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

அங்கு முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் போது, அவருக்கு கொரோனா தொற்று இருந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (நி-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2311


### முருகையன்

நல்ல தகப்பனிடம் வளர்ந்த பெண்ணிற்கு
ஆணைப்பற்றிய எண்ணம் அழகானது...
நல்ல தாயிடம் வளர்ந்த ஆணிற்கு
பெண்ணைப் பற்றிய சிந்தனை பேரழகானது




### நந்தினி

நீரோடைக்கும் பாறைக்கும் இடையே நடக்கும்
இடைவிடாத போராட்டத்தின் இறுதியில் நீரோடை
வெற்றி பெறுகிறது. தனது பலத்தினால் அல்ல
தொடர் முயற்சியினால்...
முயற்சி செய்யுங்கள் எதுவும் முடியும்



### சுந்தரம்

எப்படி வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போங்கள்.
ஆனால் எவரும் அழவோ, அழியவோ நாம் காரணமாகக்
கூடாது என்பதில் உறுதியாக இருங்கள்...



### கோவர்த்தன்

மிகவும் புனிதனாக இருக்கத் தேவையில்லை...
மனிதனாக இருந்தாலே போதும்



### விமல்

கணவன்: ஓரமா நில்லு மூதேவி
மனைவி: என்னா சொன்ன
மூ என்றால் நகருதல் தேவி என்றால்
பெண்ணைக் குறிக்கும் சொல் அதனால் தங்களை
மூதேவி என்று செல்லமாக அழைத்தேன்



### சுரேஷ்

ரோட்டில போகும் போது எதார்த்தமா தும்மினா
ஜெயில்ல இருந்து தப்பிச்சு வந்தவனை
பார்க்கிற மாதிரி பார்க்குறாங்க



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதுசாலைகள்...

களும் மாலை 6 மணியுடன் மூடப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, நேற்று முதல் இந்த நடைமுறை அமுலாக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(ம-3)

## ஜனவரி முதல்...

696 பேரும் பெப்ரவரி மாதம் 19 ஆயிரத்து 85 பேரும் மார்ச் மாதம் 9 ஆயிரத்து 463 பேரும் ஏப்ரல் மாதம் 15 ஆயிரத்து 440 பேரும் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் இம்மாதத்தில் மே 1 முதல் 11ஆம் திகதி காலை வரை 20 ஆயிரத்து 384 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-3)

## கொரோனா பரவ...

கட்டுப்பாடுகளை விதித்திருக்கின்றனர்.

இது குறித்து பொலிஸ் பேச்சாளர், பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண கூறியுள்ளதாவது,

01. வெளி மாகாணங்களிலிருந்து வரும் நபர்களுக்குத் தங்குமிடம் வழங்குவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை:
02. பஸ் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு மட்டுமே பயணிகளை ஏற்றிச் செல்ல முடியும். பஸ்ஸில் நின்று பயணிக்க அனுமதி இல்லை.
03. முச்சக்கரவண்டி ஓட்டுநரைத் தவிர இரண்டு பேரை மட்டுமே ஏற்றிச் செல்ல முடியும்.
04. அனைத்து பொலிஸ் அதிகாரிகளின் விடுமுறைகளும் ரத்து செய்யப்படுகின்றது.
05. நள்ளிரவு முதல் அனைத்து மாகாண எல்லைகளிலும் அதிரடிப் படையினர் மற்றும் முப்படையினரின் வீதித் தடை அமைக்கப்படும்.
06. விடுமுறை மற்றும் ஓய்வுக்கால பயணங்கள் அனுமதிக்கப்படாது. அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டுமே அலுவலக ஐடி பயன்படுத்தலாம்.
07. வேறு மாகாணங்களில் இருந்து வருவோரை திரும்பி அனுப்புமாறு ஹோட்டல்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.(ம-3)

## குருந்தூர்மலை...

தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வந்த முல்லைத்தீவு குருந்தூர் மலையில் இராணுவத்தினரின் ஏற்பாட்டில், பௌத்த துறவிகள், வெலிஓயா சிங்கள மக்களின் வழிபாட்டுடன் இராணுவத்தின் முழுமையான பாதுகாப்புடன் பௌத்த விகாரைக்கான வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சர்ச்சையினை ஏற்படுத்திய குமுழமுனையில் அமையப்பெற்ற குருந்தூர் மலையில் ஆண்டு தொடக்கத்தில் தொல்லியல் திணைக்கள்த்தினால் அகழ்வாராய்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டு ஆராய்ச்சியின் பயனாக முற்றுமுழுதாக இராணுவத்தின் பாதுகாப்புக்கு மத்தியில் குருந்தூர் மலையில் பௌத்த விகாரைக்கான வழிபாடுகள் நேற்றுமுதல் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

பிரித் ஓதல் வழிபாடுகள் இடம்பெற்று விகாரை பூசைகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன. தொல்பொருள் திணைக்களத்தின் அகழ்வாராய்ச்சி தொடங்கிய காலத்தில் இருந்து குருந்தூர்மலை முற்றுமுழுதாக படையினரின் கட்டுப்பாட்டின் கீழே கொண்டு வரப்பட்டு அனுமதி இன்றி தமிழர்கள் எவரும் செல்லாதவாறு படையினர் தடைவிதித்து வந்துள்ள நிலையில், நேற்று முன்தினம் இரவு நூற்றுக்கணக்கான படையினரின் பாதுகாப்பிற்கு மத்தியில் 30 பௌத்த துறவிகளின் பிரித் ஓதலுடன் பௌத்த சின்னம் நிறுவப்பட்டுள்ளதுடன் புத்தர் சிலை கொண்டு வரப்பட்டு குருந்தூர்மலை பௌத்த வழிபாட்டு இடமாக மாற்றப்பட்டுள்ளது. (ம-3,281)

## வட மாகாண...

பரிசோதனையில் யாழ்.மாவட்டத்தில் 35 பேருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 23 பேருக்கும் (16 பேர் தனிமைப்படுத்தல் நிலையத்தை சேர்ந்தவர்கள்) கிளிநொச்சி மாவட்டத்தில் 7 பேருக்கும் வவுனியா மாவட்டத்தில் 7 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

(ம-3,18,33,90,316)

## கொரோனாவால்...

நேற்றிரவு உறுதிப்படுத்தினார்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 850 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் நாட்டில் நேற்றும் +2,530 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர். (ம-3)

## வெளியான...

இதுவரையில் தீர்மானிக்கவில்லை என்று இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

சமூக வலைத்தளங்களில் இன்று (நேற்று) இரவு 11 மணி முதல் நாளை (இன்று) அதிகாலை 4 மணி வரை ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படுவதாக சில சமூகவலைத்தளங்களில் செய்திகள் வெளியாகி வருகின்றன.

அது தொடர்பில் கருத்துத் தெரிவித்த இராணுவத் தளபதி,

அந்த தகவல் உண்மைக்கு புறம்பானது என்று தெரிவித்துள்ளார். (ம-3)

## இரு...

நடந்த இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற மன்னார் முருங்கன் பகுதியைச் சேர்ந்த வேதநாயகம் டிரோன் றஞ்சித் (வயது - 26) என்ற இளைஞன் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று அவர் உயிரிழந்துள்ளார்.

இதேவேளை வவுனியா இறம்பைக்குளம் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - துவிச்சக்கர வண்டி விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த 5ஆம் திகதி இடம்பெற்ற இவ்விபத்தில் துவிச்சக்கரவண்டியில் சென்ற வவுனியா மறுவன்புலம் சாத்திரிகுளம் பகுதியைச் சேர்ந்த தருமலிங்கம் தட்சணாமூர்த்தி (வயது - 68) என்பவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி கடந்த ஞாயிற்றுக்கிழமை அவர் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மரண விசாரணைகளை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந. பிரேம்குமார் மேற்கொண்டார். (ம-3)


**மஹஜன சம்பத**
திகதி 2021/05/11
சீட்டிழுப்பு இலக்கம் 4478
P 4 5 2 8 0 5

**கொவிசெத** உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 11.05.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2773
Y 35 46 58 76

**தன நிதானய**
திகதி - 2021.05.11
சீட்டிழுப்பு இலக்கம் - 515
H 41 50 53 72

**சுபிரி வாசனா**
2021/05/11 1597
15 03 19 27 40

**மெகா பவர்**
திகதி 11/05/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0834
M 15 04 14 37 42

**அத கோடிபதி** ADA KOTIPATHI
கிழமை: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1274
வர்ணம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 11.05.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 133,651,943
வெற்றி இலக்கங்கள் 40 61 69 77 G

**சனிதா**
கிழமை: செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 3604
வர்ணம்: இள நீலம்
சீட்டிழுப்பு திகதி: 11.05.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 39,649,401
வெற்றி இலக்கங்கள் 01 10 31 63 K

**ராசி** சுப்பர் ஜக்பொட் 2,489,619/=
திகதி: 11.05.2021
வெற்றி வாரம்: 3155
வர்ணம்: சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 04 23 51 62 கும்பம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,850,040

**SUPER BALL**
சீட்டிழுப்பு வாரம் 1448 நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 11/05/2021 தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் B 11 23 32 46
அடுத்த சுப்பர் ஜக்பொட் 55,797,688/=

**ஜய**
724 இளஞ் சிவப்பு 11.05.2021 செவ்வாய்
U 42 50 72 79
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 81,603,310
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

அதிர்ஷ்டத்தின் அடையாளம்
யாழ் மக்களின் அக்ஷய பாத்திரம்
தங்க மகுடம்
மஹஜன் சம்பத
10-05-2021 -திங்கள் - விசேட மஹஜன
6 இலக்கங்கள் (8 8 2 8 1 1) பொருந்தியதில்
எமது விற்பனையில் வெறும் 20 ரூபாவில்
20 லட்சம்
வெல்லப்பட்டுள்ளது.
இந்த விசேட தங்க மகுடம் மஹஜன சீட்டிழுப்பில் அகில இலங்கை ரீதியில் வெல்லப்பட்ட
ஒரேயொரு 20 லட்சம் பரிசு இதுவாகும்.
08 நாட்களில் யாழ் மாவட்டத்தில் வெல்லப்பட்ட இரண்டாவது 20 லட்சம்
(C-2145)
ஒன்றாவது வாங்குவோம் என்றாவது வெல்வோம்!!!!
நடராஜா வசீகர்
பிரதான முகவர்,
சுண்ணாகம்.
தேசிய லொத்தர் சபை N220063
DLB - NLB வ.நடராஜா சுண்ணாகம் ஆரம்பம் 2003


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்வரும் 30 ஆம் திகதி வரை மாகாணத்திற்கு வெளியே சுற்றுலா செல்லத் தடை

(கொழும்பு)

எதிர்வரும் 30 ஆம் திகதி வரை மாகாணத்திற்கு வெளியில் சுற்றுலா செல்வதற்கும் வார இறுதி சுற்றுலாக்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பொலிஸ் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். (ம-03)

**Physics Zoom Classes**
Electricity 130 MCQ கடந்தகால வினாக்கள்
( 12 வகுப்புக்களில் )
திங், செவ், வியா, காலை 5.30 மணி
**திவ்யன்** B.SC,PGDE
( யாழ். தேசிய பாடசாலை ஆசிரியர் )
074 136 5446
இல.234, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். ( கோலாசிற்றி ) (6875)

# எதிர்வரும் மூன்று வாரங்களில் கொரோனாவால் மரணிப்பவர்களின் எண்ணிக்கை உயர்வடையும்

## இலங்கை மருத்துவ சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

ஒருமாத காலத்திற்கு முன்னர் இனங்காணப்பட்ட கொரோனா வைரஸ் தொற்றாளர்களிலிருந்தே தற்போதைய கோவிட் - 19 மரணங்கள் பதிவாகி வருகின்றன. எனவே தொற்றாளர்களின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்துவரும் நிலையில், எதிர்வரும் மூன்று வாரங்களில் தொற்றினால் மரணிப்பவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என்று இலங்கை மருத்துவ சங்கத் தலைவர் வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கூறியதாவது,

அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இலங்கை மருத்துவ அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, இராஜாங்க அமைச்சர்களான சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே மற்றும் சன்ன ஜயசுமன ஆகியோருக்குமிடையில் கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. நாட்டில் பரவிவரும் கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான நடைமுறைகள் தொடர்பில் ஆராய்வதற்காகவே இச் சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

இதன்போது கொரோனா வைரஸ் பரவலினால் சுகாதாரத் துறை எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள், அனைத்து மருத்துவமனைகளினதும் கட்டில்கள் நிரம்பியுள்ளமை, அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்படும் ஊழியர்கள், ஒட்சிசனுக்கான தேவை அதிகரித்தல், சுகாதாரப் பிரிவிற்குத் தேவையான ஏனைய வளங்கள் ஆகிய விடயங்கள் தொடர்பில் நாம் எடுத்துரைத்தோம் என்றார். (ம-03)

**காணி விற்பனை**
யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட
( யாழ். நகரில் இருந்து 1 1/2 Km தூரம் )
ஒட்டுமடம் சந்தி, மானிப்பாய் வீதி,
முதலாம் ஒழுங்கையில்
24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
( 2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும். )
1 பரப்பின் விலை 6 இலட்சம்.
077 468 3354
077 288 0152
074 075 4204
(C-2151)

**காணி விற்பனைக்கு**
பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு உட்புறமாக 1.5 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளவும். தரகர் தேவையில்லை.
☎-077 106 6112
(C-2148)

**பணிப்பெண் தேவை**
யாழ்.நகரில் உள்ள வீடொன்றில் இரு சிறிய குழந்தைகளை மட்டும் பராமரிப்பதற்கு
35 - 50 வயதிற்கு உட்பட்ட
தங்கி நிற்கக்கூடிய பெண் வேலையாள் தேவை.
☎-075 988 0000
(6873)

**PERSONAL & GROUP CLASSES**
LOGIC
S.S.மனோகரன்
இராஜ வீதி, திருநெல்வேலி
(விவாகப் பதிவாளர் காரியாலயம் முன்பாக.)
(6844)

**கட்டட நிர்மாண சேவை**
எமது கட்டட நிர்மாண நிறுவனத்தினரால் வடமாகாணத்தின் எப்பகுதியிலும் தரமான, உறுதியான கட்டடங்கள் உங்களின் விருப்பத்திற்கும் வசதிக்கும் ஏற்ப அனுபவம் வாய்ந்த ஊழியர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மூலம் குறித்த காலத்தில் நிர்மாணித்துக்கொள்ள நாடுங்கள்.
கட்டட அனுமதிகளும் எம்மால் பெற்றுக் கொடுக்கப்படும்.
**Luxmy Construction**
Pannaiampathy, Puloly North, Pointpedro.,
Neervely South, Neervely. (C-2149)
தொடர்பு
077 436 6704
077 179 1963

ONLINE SEMINAR
தமிழ் மொழியிலான கலந்துரையாடல்
STUDY MEDICINE IN CHINA
on 15th MAY 2021
at 10.00am
மேலதிக தொடர்புகளுக்கு
Dr. தேவா
Mob : 076 764 6888 Tel : 011 588 2896
Authorised agent in Sri Lanka
BYF EDUCATION (PVT) LTD
2C, 1/2, Charles Place, Dehiwala, Sri Lanka
www.byfedulk.com
(6847)

**அண்ணா** EXPRESS Courier Service
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/=
070 3305500
077 888 9388
(C-2134)
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை, ஆவரங்கால், நெல்லியடி, சங்கத்தானை
பளை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லை
மல்லாவி, மன்னார், வவுனியா, கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

**யாழில் No.1 ஆங்கிலப்பயிற்சி மையம்**
A/L பரீட்சையின் பின் உயர்கல்வி கற்கவிருக்கும் மாணவர்களுக்கான விசேடமாக வடிவமைக்கப்பட்ட Zoom + LMS ஊடான ஆங்கில கற்கைநெறி
ZOOM ONLINE LEARNING
DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
Reading Writing Speaking Listening
DMI COMPUTER EDUCATION
Call now
0777173517
0777240707
அனைத்து கிளைகளிலும் ஒரேநேரத்தில் பதிவுகளை முற்கூட்டியே மேற்கொள்ளவும்
ஆரம்பம் 17 / 5 / 2021
உங்கள் முழுமையான ஆங்கிலப்புலமைக்கு
யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | Mon,Wed,Fri - 10 a.m.
கிளிநொச்சி | சுன்னாகம் | சண்டிலிப்பாய் | Sat,Sun - 3 p.m.
DMI COMPUTER EDUCATION
(C-2136)

**வீடு வாடகைக்குத் தேவை**
வெளிநாட்டவர் குடும்பம் இரண்டு வருடம் தங்குவதற்கு பொருத்தமான வீடு தேவை. கச்சேரி - நல்லூர் வீதி, நாவலர் வீதி, கோவில் வீதி, பலாலி வீதி, பிரதான வீதி, சுண்டிக்குழி, பருத்தித்துறை வீதி போன்றவை விரும்பத்தக்கது.
குளியல் அறைகளுடன் கூடிய அறைகள், குளிரூட்டி வசதி, வாகன கராஜ் விரும்பத்தக்கது. (C-2146)
077 678 0894
070 366 3600

**விரைவு பொதிகள் சேவை**
V2 TRAVELS
UK-1000/=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
0768226240 DHL
(C-2133)

ASTP®
Your Partner in IT Solution
49, 1st Cross Street, Jaffna.
We ASTP Tec Pvt Ltd, operating in Northern province as a computer service provider for a last 25 Years.
**Walk in interview**
1.Hardware Technician-கணனி தொழினுட்பவியலாளர்
1. Minimum 1 year Experience in related field
2. Ability to work well with team members and independently
3. Minimum qualification is Diploma or NVQ level in computer hardware
4. Should have valid licence for riding bikes
2.Receptionist-வரவேற்பாளர்- பெண்
1. உயர்தரத்தில் சித்தி
2. ஆங்கிலத்தில் புலமை
3. மூன்றாம் மொழியறிவு-மேலதிக தகமையாகும்
Salary is negotiable
தகமை உடையோர் 15/05/2021 காலை 10மணிக்கு நேர்முகத் தேர்விற்காக இல.49இ 1ம் குறுக்குத் தெரிவிலுள்ள அலுவலகத்திற்கு நேரில் அழைக்கப்படுகின்றீர்கள்.
மேலதிக தகவலிற்கு அழையுங்கள்: 0212228147/0212222674
(C-2150)

**பணியாளர்கள் தேவை**
சாவகச்சேரி நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு சமையல் உதவியாளர், கொத்து றொட்டி போடுபவர், பிறைட்றைஸ் தயாரிப்பாளர், உணவு பரிமாறுபவர்(வெயிற்றர்) போன்ற பணிகள் செய்யக்கூடிய பணியாளர்கள் தேவை.
தகுதியுடையோர் நேரில் வருகை தரவும்.
தொடர்பு (C-2147)
077 649 1027
077 940 0963

**சிறுநீரகம் தேவை**
32 வயதுடைய A+ குருதி வகையைச் சேர்ந்த ஆண் சிறுநீரக நோயாளி ஒருவருக்கு A+ அல்லது A-, O+ அல்லது O- வகையை உடைய சிறுநீரகத்தைத் தானமாக வழங்கக்கூடியவர் தொடர்பு கொள்ளவும். (6858)
தொடர்புக்கு :
Sanju
076 531 4995
075 576 0264

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.05.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.